SRI RAJAGOPALASWAMI
KEERTHANAMS

BY

SENGAMALA VALLIAR
wife of A. K. SRINIVASA IYENGAR
Tamil Pandit
Findlay High School, MANNARGUDI

2-nd Edition
(Revised and Enlarged)

T13948
R005C01
T.13948

1939 [Price As. 8

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீராஜகோபாலஸ்வாமி கீர்த்தனங்கள்

மன்னார்குடி பிண்ட்லே ஹைஸ்கூல்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
A. K. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்களின்
பார்யையார்
செங்கமலவல்லியார்
இயற்றியவை.

(2-ம் பதிப்பு.)

காபி ரைட்.] 1938 [விலை அணா 8.

PRINTED AT THE GANAPATI PRESS
FINDLAY COLLEGE BUILDINGS :: :: MANNARGUDI.

முகவுரை (முதற் பதிப்பு)

நன்ருகக் கற்றுத் தேர்ந்து கவி பாட வல்ல திறமையற்ற நான், ஏதோ எம்பெருமான் கிருபையினுல் அப்பொழுதப் பொழுது பாடி வைத்திருந்த கீர்த்தனங்களை என் நண்பர்கள் சிலரின் வேண்டுகோளுக்கிணங்கித் தொகுத்து, ஒரு புஸ்தகமாக வெளியிட லாயினன். இதில் குறைகள் பல இருக்கும் என்பது நிச்சயமே ஆயினும், எம்பெருமானைப் பற்றிப் பாடப் பட்டவைகள் ஆனதால், பெரியோர்கள் அவற்றை நீக்கி ஏற்றுக்கொள்ளுவார்களாக.

தக்ஷிணத்துவாரகை
5—10—1929

செங்கமலவல்லி.

இரண்டாம் பதிப்பின் முகவுரை.

இரண்டாம் பதிப்பில் புதிதாக இருபது கீர்த்தனைகள் சேர்க்கப்பட்டுள்ளன. நல்லக்ளேஸ் காகிதத்தில் அச்சிடப் பட்டு, ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமியின் உருவப்படம் ஒன்றும் சேர்க்கப்பட்டிருக்கிறது. பெரியோர்கள் இதை ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

தக்ஷிணத்துவாரகை
2—12—1938

செங்கமலவல்லி.

கீர்த்தன அட்டவணை

1	அஞ்சன வண்ணா	45
2	அண்டங்களை	46
3	அருள்வாரிதியே	19
4	அறிவேனோ நான்	10
5	ஆடியசைந்து	61
6	ஆடினாரே கோபா	25
7	ஆண்டவனாய்	4
8	ஆதிவண்சடகோ	3
9	ஆளும் பல்லாக்கு	47
10	இணையடி துதிக்க	36
11	இத்திசையினில்	49
12	இன்னந்தாமஸம்	14
13	இனிமேலே கதி	20
14	உடலைப்பழிக்கா	32
15	உல்லாஸமாய் வா	47
16	உன்னருளையல்	33
17	உனது மகிமை	21
18	ஊஞ்சலாடுறார்	26
19	எங்கும் நிறைந்தி	37
20	எத்தனை பக்தர்	9
21	எந்தன் மதிகலங்	29
22	எப்பொழுதும்	51
23	என்ன இவர்மேனி	43
24	என்ன க்ரீடை	18
25	என்னத்திற்கு	19
26	என்ன நான்	35
27	ஏனோ பராமுகம்	60
28	ஓகோபாலா ஓடி	50
29	கண்கள் ஆயிரம்	42
30	கண்டுகளிப்பதெந்	34
31	கண்டுமனம்	21
32	கதிவேறில்லை	13
33	கருணைக்கண்ணால்	6
34	கரைகண்டிலேன்	12
35	கானில் கன்று	38
36	குடை பிடித்தார்	45
37	கொஞ்சிவரும்	57
38	கோரதத்தின்	57
39	கோரின வாத்தை	39
40	சுற்றிச் சுற்றி	35
41	செங்கமலவல்லி	62
42	செம்பகாரண்ய	6
43	சேத்திமண்டப	23
44	த்வஜாரோஹணம்	41
45	த்வாரகாவாஸா	17
46	தக்ஷணத்வாரகா	8
47	தாயே நீ யிங்கு	61
48	தாஸர்களே கூடு	2
49	திருப்பாற்கடல்	40
50	தீனையான	56
51	துறவறம்பூண்	5
52	தேராவினில்	15
53	தேஜோன்மய	13
54	நித்தியனே உன்	18
55	பலியாதகாரி	10
56	பாடிடுவோம்	24
57	பாய்ந்தேறிக்	59
58	பார்க்கப்பதி	23
59	பார்த்தவர்க்கன்	31
60	பாற்கடல் நின்று	63
61	பிர்ம்மோத்ஸவ	38
62	பூபாலனும்	8
63	பூமிபதே	15
64	பெண்ணாய் நின்	28
65	மடாதிபதி	2
66	மதிமோஹனா	30

67 மாதவனே 22
68 முத்து ஜொலிக்குது 16
69 யமுனை தன்னில் 42
70 ராமாவதாரம் 27
71 வடிவிற்சிறந் 55
72 வந்துதித்தாரே 4
73 வாடிதேவி 26
74 விஜயலக்ஷிமி 63
75 வீடே ஈதொரு 33
76 வெண்ணெய்த் 58
77 வைரமுடி தரித்தே 54
78 ஜோதி தெரியுதே 52
79 ஜோதி பெருகிடும் 60
80 ஹயக்ரீவஸ்வாமி 1
81 ஹநுமான் மீதி 55
82 ஹிம்ஸை தீர்க்க 44
83 ஸாக்ஷிபூதா 11
84 ஸிம்மாஸனமான 53
85 ஸ்ரீ ராஜகோபாலனுக்கு 64

பிழை திருத்தம்.

கீர்த்தனம் எண்	பிழை	திருத்தம்
5	ஆதி	ரூபகம்
6	த்ரிபுட	சாபு
30	த்ரிபுட	சாபு
37	ரூபகம்	ஆதி
45	கீரவாணி	ஸிம்மேந்த்ரமத்யம்.
53	ஆதி	ரூபகம்
67	ஆதி	ரூபகம்

ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி.

ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி
கீர்த்தனங்கள்

கீர்த்தனம். 1. ஹயக்ரீவர் ஸ்தோத்ரம்.

ராகம்: மோஹனம். தாளம்: ஆதி. மெட்டு: நன்னுபாலிம்ப.

ப:-ஹயக்ரீவஸ்வாமி அருள்புரிவீரே (ஹ)

அ:-கயவரில் தாழ்ந்தும்—கடைத்தேற எண்ணினேன் (ஹ)

ச:-புயபல ஸ்ரீமாஉம்—பொற்பாதந் தன்னைத்
தயவு செய்வீரோ—திறமில்லாத என்மேல்
வயதாகிவிட்டதென்று—வருந்துகின்றேன் ஐயா
வாசக மனத்தையும்—தேசிகருக்கன்று
நேசமாக உப—தேசஞ் செய்தீரே
மாசில்லாமல் எந்தன்—பாசமதை ஒழித்துப்
பூஜை புரியும் நல்ல—தாசனுக்கிக் கொண்டு (ஹ)

அறியாத மூடமாய்—அவனியில் வந்து
பரிதபிக்கின்றேன்—பரந்தாமா உம்மை
தெரியாமலே அடியேன்—திண்டாடுகின்றேன்
குறியாக இந்தக்—கோபாலன் தன்னைப்
பிரியாமல் மனத்தில்—பதித்திடவேண்டும்
கருமணிவண்ணா—கருணை செய்வீரே
சிறியேனைப் வாடும்—செங்கமலத்தின்மேல் (ஹ)

கீர்த்தனம் 2, வேதாந்த மகாதேசிகர்.

ராகம்: ஹிந்துஸ்தான் பியாக். தாளம்: ஆதி.
மெட்டு: இந்த வனத்திலே.

ப:-தாசர்களே கூடுவோம் நம்—தேசிகரைப்
பாடுவோம் (தா)

அ:-நேசத்துடன் எதிர்நாடி—ஆசையுடனே கொண்டாடி
தேசிகரிடத்திலோடி—பூசுரர் எல்லாரும் கூடி (தா)

ச:-மாசிலா மகிமைபெற்ற—மந்தஹாஸரூபனை
பாசவலையை யொழித்து—பாதங்களைக்காணவே
பூஜைகள் புரிந்துமே—புனிதராக எண்ணங்கொண்ட (தா)

கீர்த்தனம் 3. அஹோபிலமடத்து ஸ்வாமி.

ராகம்—மத்யமாவதி. தாளம்—ஆதி.

ப:-மடாதிபதி ஆனோரே—வீடானமோக்ஷமென்னும்
தடாக மதில்மூழ்கி (ம)

அ:-மடாதிபதியிடம்—சடாரி தரித்தோரைக்
கடாவாஹனன்வந்து—தொடாமல் கரையேற்ற (ம)

ச:-திடமானதேகமென்றே—மடபுத்தியுடன் எண்ணி
அடமான வழிசென்று
படர்கள்வந்து வதைக்க—அடித்தே ஜீவன்பறக்க
சடகோபர் தானறிந்து—விடுவிக்க மனங்கொண்டு (ம)

அகோபிலத்தில் சென்றாரே—உக்ரநரஸிம்மனை
பக்குவமாகப்பணிந்து
குக்ஷியில் அண்டம்வைத்து—கஷ்டம் இன்றிக்காக்கும்
லெக்ஷ்மிநரஸிம்மனும்—பக்ஷமானவரைக்கொண்டு (ம)

கீர்த்தனம். 4. ஆதிவண் சடகோபர்.

ராகம் : தோடி. தாளம் : ஆதி. மெட்டு : கோடி நதிலு.

ப:-ஆதிவண் சடகோபர்—பாதமலர் பணிய
மாதர்களே நாம் முன் செல்வோம்—இப்பொழுதே (ஆ)

அ:-வேதம் அறியாதோர்க்கும்—நீதி தவறினோர்க்கும்
ஓதி அஷ்டாக்ஷரத்தை—ஜோதியாய்க்கரை ஏற்றும் (ஆ)

ச:-மாதவர் முன்னால் அவர்—வாதுகள் செய்து நம்மை
ஆதரவுடன் காப்பர்—அடிக்கடி
பேதையர்களைக்கூட்டி—நாதர் மகிமை சொல்லி
காதக யமன்வந்து—வாதிக்காமலே செய்யும் (ஆ)

எங்கும் இணையில்லாத—எங்கள் ஆசாரியன் பாதம்
தங்கவே ஸேவித்திடுவோம்—நாமெல்லோரும்
இங்கித மறிந்தவர்—எம்பெருமான் போலொத்தோர்
சங்கையில்லாமல் வந்து—செங்கமலத்தைக் காப்போர் (ஆ)

கீர்த்தனம். 5. ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன்.

ராகம்: தோடி. தாளம்: ஆதி.

ப:-வந்துதித்தாரே—தந்தை தாய் உகந்திருக்க (வ)

ச:-பந்து மித்ரர் வந்திருக்க—இந்த பூமி செழித்திருக்க
அந்தரத்தில் தேவர்களிக்க—பந்தபவ வினைபறக்க (வ)
தந்தைதாயு முதுமையடைய—மைந்தனற்ற மனமும்
உடைய
சிந்தையில் ஹரித்யானம் செய்திட—நந்தகோகுலத்தை
விட்டு (வ)
தரணியாண்ட தசரதராஜன்—வருந்தி அழைக்கவந்தராமன்
பெரியோர்செய்த பெருந்தவத்தை—தெரிந்துகொண்டு
தேரெழுந்தூரில் (வ)

பால் தயிர் பண்டங்கள் வெறுத்து-கோதிலாக்குணங்கள்
படைத்து
மேலான மூலத்தைப்பிடித்து-காலனைக் காலால் உதைக்க ()

கீர்த்தனம். 6. இதுவும் அது

ராகம்: சங்கராபரணம். தாளம்: திரிபுட.

மெட்டு: எக்காலத்திலும் மறவேன்.

ப:-ஆண்டவனாய் உதித்தார்—பாண்டவரைக் காத்தோர் (ஆ)

அ:-பாண்டமான தேகத்தை—பூண்டு வினைவதைக்க
வேண்டி வருந்துவோர்க்கதை— தாண்ட வழியுரைக்க (ஆ)

ச:-மண்கொண்ட மாநிலத்தில்—மன்றாடும் ஜீவன்எல்லாம்
திண்கொண்டு பாபம்தேடி—தீரா நரகடைய
விண்கொண் டமரர்நாதன்—வேதனைகளைத்தீர்க்கக்
கண்கண்ட தெய்வமாய்—கலியுகம் ஈடேற (ஆ)

பெற்றதாயும் வருந்த—உற்றார்களும் தடுக்க
பத்தினி புத்திரர்மேல்—சித்தம்தன்னை வெறுத்து
சுத்தன் பாதாரம் தன்னில்—பக்தியில்லாதவரை
எத்தினாலே அழைத்து—புத்திமதி உரைக்க (ஆ)

கீர்த்தனம். 7. இதுவுமது. ராகம்: செஞ்சுருட்டி.
தாளம்: ஆதி. மெட்டு: சிதம்பரம் போகாமல்.

ப:-துறவறம் பூண்டார்—பரம ஸந்தோஷத்துடன்
கரமதில் தண்டெடுத்துக் கொண்டே (து)

அ:-அரவமதில் படுத்த—அரங்கன் மலர்அடியில்
பரவுமெய்ஞ்ஞானம் பெற்றே—பரந்தாமன்
பாதங்கண்டார் (து)

ச:-முதுமை அடைந்த பெற்றோர்—புதுமையாய்
இதைக்கேட்டு
பதறியே மனம் தவிக்கப்—பார்த்தே.
கதறுவானேன் நீங்கள்—கற்றறியாரைப்போல்
பதறாமல் பௌத்ரனைப்—பார்த்து மகிழ்வீர் என்றே (து)

சின்ன ஆண்டவனுடை சேவடி பணிந்துமே
தன்னை ஆட்கொள்ளவேண்டியே—சென்றே
கண்மணி யானபுத்ரி—கண் எதிரில் கதற
உன்னி ஒரு ஸ்லோகத்தால்—உகந்திடச் செய்துமே (து)

பத்னி அருகிருந்தால்—பார்த்திராள் என்றுமே
சித்தம் தன்னில் அறிந்து—கொண்டே
பெற்றவர் அகமே—உத்தமி போகவே
அத்தருணத்திலே—தத்துவம் நிலைக்கவே (அ)

கீர்த்தனம். 8. இதுவுமது. ராகம்:ஹரிகாம்போதி. தாளம்: ஆதி.
மெட்டு : தினமணிவம்ச.

ப:-கருணைக் கண்ணால் பார்த்தால் தரணிதன்னில் உதித்தோர்
வறுமை எல்லாம் தீரும் (க)

அ:-அருண உதயத்தில்—அரங்க நகர் சென்று
சாரார விந்தத்தில்—சற்றேற பணிந்தோரை (க)

ச: நலந்தரும் நாலுவேதம்—அலர்ந்திடும் ஆறுசாஸ்த்ரம்
குலத்திற்கான கலைகள் கற்றூர்
சாஸ்திரத்தைக் களைந்தார்—சரணாகதி மேல் என்றூர்
தேசிகரைப் புகழ்ந்தார்—தாசரைக் காக்க வந்தோர் (க)

யாவரும் பூஜிப்பார்—நாவலர் யாஜிப்பார்
தேவரும் புகழ்ந்திடுவார்
ஆநந்தமான ஸ்ரீமத்—ஆண்டவன் மகிமையை
ஆதிசேஷன் உரைக்க—அநந்தம் நாவும்போதுமோ (க)

கீர்த்தனம் 9. க்ஷேத்திர மகிமை.
ராகம்: ஸாவேரி. தாளம்: ஆதி.
மெட்டு:மகத்துவமுள்ள கதை.

ப:-செம்பகாரண்ய—க்ஷேத்திரத்தின் மகிமை
செப்பிடவே என்னால்—ஆமோ (செ)

அ:- அம்பரவாசிகள் — அனைவர்களும் கூட
செம்மையாய் வாழ்ந்திடும் — செழும்மறையோர் நாட
தும்புரு நாரதர் — வீணாகானங்கள் பாட
ரம்பை யூர்வசியாட — ராஜகோபாலனுட (செ)

ச:- செம்பக மலராலும் — சிவந்த ரோஜாப்பூவாலும்
சிறந்த முத்துமுல்லை யாலும்
செங்கழுநீரோடையும் — செழிக்கும் நந்தவனமும்
அங்கினில் நால்புறமும் — ஆழ்ந்த அகழிகளும்
எங்கும் ப்ரஸித்திபெற்றோர் — வந்து தவம்புரிய
சங்கு சக்கரத்தோடு — சரண்யன் வந்துநித்த (செ)

எண்ணிலா தீர்த்தமும் — எம்பெருமான் ஸேவையும்
கண்ணினால் கண்டால் போதுமே
புண்ய நதியாம் ஹரித் — ராநதி பாமணியும்
கண்யமான க்ருஷ்ண — கஜேந்த்ர கோப்ரளயம்
கண்ணனுக்குகந்த கோபி — ருக்மணி சங்கு சக்ரமும்
பண்ணின வினையைத்தீர்க்கும் — பாற்கடலும் தங்கிநிற்கும் (செ)

அரிய தவப்புரிந்தார் — கோபிலர் கோப்பிரளயரும்
அநாத ரக்ஷகனைக் காண
பிரியமாக அன்று — பிருந்தா வனத்திலே
சிறிய இடையரோடு — செய்த லீலையைக்காட்ட
வறியோரைப் போல் ரிஷிகள் — வருந்தி அழைக்கக்கண்டு
தெரிய க்ரீடை செய்தான் — தேவி செங்கமலத்துடன் (செ)

கீர்த்தனம், 10. இதுவுமது

ராகம்: காபி. தாளம்: ஆதி. மெட்டு: கலிலோஹரி

ப:-தக்ஷிண த்வாரகா வாஸனைத்
தேடியே பிடித்திடுவோம்—கிருஷ்ணனை (த)

அ:-பக்ஷமுடைய பக்தர்—இஷ்டமுடன் அழைக்க
அஷ்ட லக்ஷிமியுடனே—அவதரித்த (த)

ச:-துஷ்டனான கம்ஸன்—கஷ்டம் பொறுக்காமலே
தொண்டர்கள் வருந்திடவே—துயரடைந்து
குக்ஷியில் அண்டம்வைத்த—விஷ்ணு அறிந்ததனே
ரக்ஷிக்க எண்ணங்கொண்டே—வந்துதித்த (த)

பாப ரஹிதரான—கோபிலரும் களிக்க
கோப்ரளயருமகிழ—கோபாலன் தானும்
ஆபத்தில் வருந்துவோர்க்—கபயமளிக்கவென்று
சோபிதமாய்ச் செங்க—மலத்துடனே வரும் (த)

கீர்த்தனம். 11. ராஜகோபாலன் விஷயம்.

ராகம்: களாநிதி. தாளம் : ஆதி. மெட்டு : சின்னநாடனு.

ப:-பூ பாலனும்—கோபாலனை ஸேவி (பூ)

அ:-ஆபரண சோபிதனை நாய்—பாப்பத்ர தாபமுடனே (பூ)

ச:-சின்னஞ்சிறியேன்—என்ன பிழை செய்தேன்
பின்னிடாமல் வந்தால்—மன்னித்துக்காப்பானே

புன்னைவாஹனனும்—மன்னவனவனும்
அன்னையுடன் வந்து—என்னை ஆட்கொள்வாயே

கங்கை தரித்த—சங்கரன் சாபத்தை
பங்கம் செய்துவந்து—இங்கெதிர் நின்றானை
எங்கும் கதியின்றி—பங்கயக் கண்ணனை
செங்கமலம் தேடி—அங்கமுருகிய (புந்)

கீர்த்தனம். 12.

ராகம் : உசேனி. தாளம் : ரூபகம். மெட்டு: எப்படி மனம் துணிந்ததோ.

ப:-எத்தனை பக்தர்—முக்தி அடைந்தனரோ—
நித்தியனைக்கண்டு (எத்)

அ:-இத்தனைபேர்களும்—கத்திக் கத்திக்கொண்டு
பித்தரைப்போலெங்கும்—சுற்றிச் சுற்றிக்கொண்டு
சுத்தனைக்கண்டவர்—பற்றிப் பற்றிக்கொண்டு
அத்தனை சுத்தரும் ஸத்வகுணத்துடன் (எத்)

ச:-கத்தும் யானை தன்னை—காத்து மனமகிழ்ந்தான்
சித்தம் இரங்கி
பக்தர் துதிப்பதைப் பார்த்து மிக உகந்தான்
மெத்தத் துணிவுடன்
ஹத்திசெய்து அக—மகிழ்ந்தோரானாலும்
குத்திக் குதூகலம்—அடைந்தோரானாலும்
எத்தினாலே என—தப்பனை நினைந்தால்
ஸத்தியமாய் வைப்பன்—மெத்தப் பதந்தன்னில் (எத்)

கீர்த்தனம். 13.

ராகம்: தோடி தாளம்: ரூபகம்.

மேட்டு: விடலனு கோதண்டபாணி

ப:-பலியாத காரியங்கள் உண்டோ
பால கோபாலனைக் கண்டால் (ப)

அ:-கலிமுதிர—கருமம் தொடர
சலியாமல் நாம்—சற்றே பணிந்தால் (ப)

ச:-வலியதவம் புரிந்ததனால்—வந்துதித்தோம் மானிடராய்
நலிவடைந்தோம் நயமில்லாமல்—
நானென் றகம்பாவத்தினால்
ஒலிக்கும் திருமந்திரத்தை—உபாஸிக்க வருத்தம்
கொண்டோம்
மெலிவடையும் முன்னால் ஓடி—மேகவண்ணன் பாதம்
பணிந்தால் (ப)

வானோர் வளர்த்துவந்த—வாசனைகள் உள்ளதான
கானார் நறுந்துழாயை—கைதன்னிலே கொண்டுவந்து
தேனார் மலரில் நின்ற—தேவி செங்கமலம் களிக்க
ஊனார் மனம் உகந்து நிற்க—உத்தம உன்தன் பாதம்
பணிந்தால் (ப)

கீர்த்தனம். 14.

ராகம்: ஹம்ஸத்வனி. தாளம் : ஆதி. மெட்டு : ரகுநாயகா.

ப:-அறிவேனோ நான் ஆநந்தமாக
குறியான எந்தன்—கோபால க்ருஷ்ண (அ)

அ:-சிறியேன் நான் என்று—சிந்தையில் எண்ணுமல்
பெரியோர்கள் கண்டு—பூஜித்த உன்னே (அ)

ச:-வெறி கொண்ட பாம்பை—வென்றதன்மேல் நின்ருய்
மரித்திடக் கன்றை—மரத்தில் எறிந்தாய்
கரியின் வினையை—கணத்தில் துடைத்தாய்
வறியோர்களுக்கு—வலிமை அளித்தாய் (அ)

திருமாலே உன்னை—தேவர்களும் போற்ற
பெருமா உரலில்—பிணிப் புண்டிருந்தாய்
இருமா மருதத்—திடையே நுழைந்தாய்
வருவாயே செங்க—மலத்தோடுகூட (அ)

கீர்த்தனம். 15.

ராகம் : ஸாருமதி. தாளம் : ஆதி. மெட்டு: மோக்ஷமு கலதா.

ப:-ஸாக்ஷிபூதா—ஸர்வலோக—யோகக்ஷேமா (ஸா)

அ:-மாக்ஷிமை பொருந்திய—மண்டலத்தில் உள்ளோர்க்கு
காக்ஷிகொடுத்தே—கரை ஏற்ற வந்த (ஸா)

ச:-வாழ்க்கையே மெய்யென்று—வலிமை மிகக்கொண்டு
தாழ்ச்சியாம் பழிசெய்து—தவித்திருப்போர்களை
வீழ்ச்சிவரும் முன்னே—விரைந்தோடி வந்தாய்
ஆட்சி புரிந்தேவந்து—அபயம் அளித்தாய் (ஸா)

காசைப் படைத்தவரும்—கைவலிமையினுல்
மாசிலாப் பக்தரை—பதமையாய் நிந்திக்க
வாஸவா உன்தனை—வருந்தி அவர் அழைக்க
நேசமுடனே அவர்கள்—நெஞ்சில் குடிகொண்ட (ஸா)

தோழர்களுடனே—துணைசென்ற கோபாலா
தாழம்பூத் தரித்தெந்தன் தாயுடனே நின்றாய்
ஆழமாம் செங்கமல—அடியிணைமீதில்
பாழான என்மனம்—பதிந்திடச் செய்வாய் (ஸா)

கீர்த்தனம். 16.

ராகம்: பிலஹரி. தாளம்: ஆதி. மெட்டு-கனுகோண்டினி.

ப-கரைகண்டிலேன்—கருணாஸாகரத்
துறை யறிய—வழியுரைப்பீரே. (க)

அ: அறையில் தேவகி—அழுதிடக் காத்தாய்
மறையோரைக்காக்க—மண்ணினில் உதித்தாய் (க)

ச:-அறங்கொண்ட பூமி - அசையாமல் நிற்க
இரங்காமல் கொன்றாய்—இரண்யாக்ஷன் தன்னை
புறங்கொள்ளாப் பக்தன்—ப்ரஹ்லாதனுக்காய்
மறங்கொள் இரண்யன்—மார்பைப்பிளந்தாய் (க)

அண்டர் முனிவர்க்கு—அதிபதி ஆனாய்
மண்டலத்தில் ராஜ—மன்னவனாய் நின்றாய்
தொண்டர்கள் களிக்க—தூரிதமாய்ச் சென்றாய்
பண்டை வினைதீர—பாதமலர் சேர (க)

பக்தர் அருந்திய—பாலமுதம் தன்னை
தித்திக்கும் என்று நான்—தின்றிட நினைந்தேன்
தத்துக்கிளி குரங்கை—தாவிப் பிடித்தாற்போல்
பித்தரைப் போலானேன்—புத்தி அறியாமல் (க)

திங்கள் வதனரே—தேவகி பாலரே
சங்கரன் விரும்ப—சாபத்தைத் தீர்த்தீரே
செங்கமலத்துடன்—சம்பகாரண்யத்தில்
தங்கிஉம் மைந்தரை—தயவுடன் காத்தீர் (க)

கீர்த்தனம் 17.

ராகம்:கவாய். தாளம் : ஆதி. மெட்டு : பாலாபிஷேகப்.

ப:-தேஜோன்மயமான—தேவகிபாலன்
தாஸரைக்காத்திடும்—ராஜகோபாலன் (தே)

தொ:-ஆசைகொண்டு தன்னைக் காணவந்தோரை
தாஸர் ஆனார் என்று ஸந்தோஷிப்பான்
பூஜை புரிந்து புனிதரானோரை
பாசவலையை ஒழித்திடுவான் (தே)

ச:-முத்தும் மணியும் இழைத்த பாதத்தை
பக்தர் மனத்தினில் வைத்துப் பதிப்பான்
பத்தரை மாற்றுத் தங்கமோ வைரமோ
ஒத்திட்டிருக்கும் அவன் இடையில்
கொத்துச் சாவிகள் குலுங்கத் தரித்து
மத்த கஜம்போல வந்திடுவான் (தே)

கீர்த்தனம் 18.

ராகம்: ஸாவேரி. தாளம்: ஆதி. மெட்டு: வேறெவ்வரே.

ப:-கதி வேறில்லை கோபாலனே—மதிதருவாய் மந்தஹாஸா (க)

அ:-அதிபதியே அனைவருக்கும்-புதிதாக வந்து புறம்போகா
நின்றேன் (க)

ச:-நிதியானவே நிர்மலனே—உதித்தாயே உன்னதமாய்
பதித்தாயே பக்தர் மனத்தில்—விதித்தாயே வேணு
கானம் தன்னை (க)

பொங்கும் ரோஜா புஷபம் தன்னை—அங்கம் தெரியாமல்
அணிந்துகொண்டாய்
மங்கை செங்கமலத்தை விண்டாய்—இங்கெதிர் வந்து
ஏகாந்தமாய் நின்றாய் (க)

கீர்த்தனம். 19.

ராகம்: சங்கராபரணம். தாளம் : ஆதி. மெட்டு : எத்துட.

ப:-இன்னம் தாமசம் ஏனோ ஏ நாதா
ஏனோ பராமுகம் ஏ கோபாலா (இ)

அ:-உன்னையல்லால் உலகினில்
உயர்ந்த தெய்வம் உண்டோ கருணாநிதியே
மன்னவா உன்னுடைய மலரடிஸேவித்து
முன்னால்வா நினைத்தேன் மாலே அனுக்ரஹிப்பாய் (இ)

ச:-அன்னை தேவகிவாடி—உன்னைக்கூவி அழைக்க
முன்னாலே வந்து அவள்—துன்பம் துடைத்தாயே
கன்னிகோபியர் ஆடை—புன்னைமரத்தொளித்தாய்
என்னைக் கைவிடலாமோ—பின்னல் முடித்த பாலா (இ)

மங்கையர் உடன்கூட பொங்கும் யமுனைசேர்ந்து
அங்கே ஜலக்ரீடைகள்—தங்கியே செய்தாயே
செங்கமலத்துடனே—சங்கை இல்லாமல் நின்று
மங்களாலங்காரனே—எங்களை ரக்ஷித்திட (இ)

கீர்த்தனம் 20.

ராகம்; கமாஸ். தாளம்; ஆதி. மெட்டு; ஸீதாபதே.

ப:-பூமிபதே புருஷோத்தமா—ஆவிசோர்ந்தேன்
ஆதரிப்பாயே (பூ)

அ:-பாமரரும் பரந்தாமா உன்றன்
நாமத்தைக் கேட்டால் நாடார் நரகை (பூ)

ச:-வாமனனாய் வந்துதித்தாய்—மூவடிமண் முன்னளந்தாய்
கோமளாங்கா கோபாலா நீயும்—தாமரைக்கண்ணால் தயவு
செய்வாய் (பூ)

காரார் மணி நிறத்தோனே—பேர் ஆயிரம் படைத்தோனே
சீரார் செங்கமலத்துடனே—ஆரா அமுதாய் அருள்
புரிவாய் (பூ)

கீர்த்தனம். 21

ராகம்; முகாரி. தாளம்; ஆதி. மெட்டு; ஸரஸிருகா.

ப:-தேரலினில் செல்வனைப்போல்
யார்முழுதுண்டு பாலில் துயின்றாய் (தே)

அ:-சீர்பெறும் உந்திச் செந்தாமரையில்
பேர்பெற்ற பிரமன்—பிறந்திடச் செய்தாய் (தே)

ச:-ஒருருவாய் பிரமா—உலகம் படைக்க
ஏர்கொண்ட பூலவ—இடந்து அவர்க்கீந்தாய்
ஆறுகள் மலைகள்—அதனில் துலங்க
கோரிடும் பக்தர்—குறைகளும் தீர (தே)

தன்மைகொண்ட பூமி—தவித்துன்னைச் சேர
வன்மைகொள் கம்ஸனை—வதைத்து நின்றாயே
கன்மங்கள் தொலைய—கசடர் அழிய
தென்புகொள் தக்ஷண—துவாரகையில் வந்தாய் (தே)

காணில் புகுந்து—கன்றுகள் மேய்த்து
மீன மாஸத்தில்—மேனி ப்ரகாசிக்க
வானவர் களிக்க—மானிடர் துதிக்க
தீன செங்கமலம்—திருவடிபோற்ற (தே)

கீர்த்தனம். 22.

ராகம் : ஹிந்துஸ்தான் ப்யாக். தாளம் : ரூபகம்.

ப:-முத்து ஜொலிக்குதுபார்—மூலாதாரன் மேலே (மு)

அ:-முக்திபெறவே நினைத்தவர் மனத்தை பற்றிடவே
பத்துத் திக்கையும் படைத்த பிர்மதேவன் உதித்த
உந்திமேல் (மு)

ச:-இந்த்ர நீலம்போன்ற எம்பெருமான் திரு—மேனியிலே
சந்த்ர ப்ரகாசத்தைப் பழித்திடும் நல்ல—ஜோதியுடன்
செந்தாமரை மகள் செங்கமலவல்லி—சிரித்திட (அவள்)
பந்தியான பல்லின் நின்று வந்தஒளி—என்று
பலர் சொல்ல (மு)

கீர்த்தனம். 23. தெப்பமும் நவராத்திரியும்.

ராகம் : பஞ்சமம். தாளம் : ஆதி. மெட்டு : கனிகரமுஞ்சி.

ப:-த்வாரகாவாஸா தாஸர்கள் நேசா
தேவகிபாலா ராஜகோபாலா (த்வா)

அ:-இங்கிதம் அறிந்தோர்—அங்கம் உருகவே
செங்கமலத்துடன்—மங்களமாய் உதித்த (த்வா)

ச:-அம்புவியோர் நாட—ஆனிமாதந்தன்னில்
கிம்புருஷர்பாட—அம்புலியும்கூட
தென்புள்ள பக்தரோ—டோடத்திலேஏறி
சம்பகாரண்யத்தில்—தங்கியே இருந்த (த்வா)

வருஷா வருஷம்—கன்னியா மாதத்தில்
வ்ருஷப மண்டபத்தில்—வீற்றிருக்கும்போது
ரிஷிகளும் கூடவே—ராகங்கள் பாடவே
புருஷாம்ருகத்தோடு—பூரித்தும் இருந்த (த்வா)

கீர்த்தனம் 24.

ராகம் : சங்கராபரணம். தாளம் : சாபு.

ப:-என்ன க்ரீடை செய்தாயடா— ஏ மன்னு ராஜகோபாலா
என்ன க்ரீடை செய்தாயடா (எ)

அ:-கன்னல் மொழியருடன்—கானில் அன்றுசெய்தாற்போல்
சின்னப்பெண்கள் நாங்களும்—ஸேவிக்கவேண்டுமென்று (எ)

ச:-மன்னுநீ யமுனையில்—மாதருடன் ஓடத்தில்
என்னென்ன செய்தாயென்று—ஏழை நாங்கள் அறியோம்
தென்றல் வீசும் தெக்ஷணத்—துவாரகை வாஸரோடு
மன்னு நீ க்ரீடை செய்வது—பாதென்னுல் சொல்லத்
தாமோ (எ)

கீர்த்தனம். 25. வேணுகானம்.

ராகம் : கானடா. தாளம்:ஆதி. மெட்டு:நிச்சயஜேசின.

ப:-நித்தியனே உன்மேல்—சித்தங்கலங்காமலே
பக்தி புரிந்தால்—முக்தி அளிப்பாயே (நி)

அ:-எத்திசையிலானும்—பெற்றவனே உன்னை
கர்த்தனே என்போர்க்கு—மெத்தப்பதம் அளிப்பாய் (நி)

ச:-படமெடுத்தாடுவோன்—முடிதனிலே உன்றன்
இடது பாதத்தைவைத்து—வடமுகந் திருப்பிய (நி)
ஈனபுத்தியினுல்—மானம் இழந்தோர்களை
பானம் செய்யுங் கோள் என்று (வேணு)-கானம் செய்து
நின்ற (நி)

தண்டை சிலம்பணிந்தாய்—அண்டர்க்கதிபதியே
தொண்டு புரிவோர்க்காய்—மண்டலந்தன்னில் வந்த (நீ)

முளைத்தாயே பூமியில்—வளைத்தாயே முழங்காலை
திளைத்தவனாய் நின்று—தொலைத்தாயே கம்ஸனை (நீ)

கீர்த்தனம். 26

ராகம்:கரஹரப்பிரியா. தாளம்:ஆதி. மெட்டு:ராமாநீயெடா

ப:-அருள் வாரிதியே—அடைக்கலம் புகுந்தேன்
இருள் நீக்குவீர்—எம்பெருமானே (அ)

அ:-உருளை வடிவனே—உதைத்துப் பூதகிதன்னை
மருளச்செய்த ராஜ—மன்னவனே எந்தன் (அ)

ச:-குறள்பாடி நின்ற—குவலயத்தோர்களைத்
திரளாய்த் திரட்டி—தெய்வத் தன்மையாக்கினீர்
சுருளாய்ச் சுருளும்—சொப்பனத்தில் வந்தென்னை
பொருளாய் எண்ணியே பேசி—நின்ற எந்தன் (அ)
உந்தனைக் கண்டு என்—உள்ளம் மகிழ்ந்தேனே
நந்த குமாரரே—நாடிவந்தீர் இங்கே
விந்தையான உந்தன்—வேணுகானத்தைக்கேட்டு
சிந்தை மகிழ்ந்தேன் ஐயா—சிறியேன் செங்கமலத்தின் (அ)

கீர்த்தனம் 27.

ராகம்: தேசிகத் தோடி. தாளம்: ஆதி. மெட்டு: கொண்டு வருவேன்.

ப:-என்னத்திற்கு இந்த ஜன்மம்
(நமக்) கென்னத்திற்கு இந்த ஜன்மம்
எம்பெருமான் தன்னை எதிரினிற் காணாத (எ)

அ:-பன்னக சயனனே—பதித பாவனனே
பொன்னுகந் தரித்தோனே—புண்ணியனைக்காணாத (எ)

ச:-சின்னவயது முதல்—சிறுமை அடைந்தோம் அல்லால்
உன்னிநாம் உத்தமனே—ஒருதரம் ஆகிலும் எம்
அன்னையுடன் நின்று—ஆநந்தமாயிருக்க
முன்னாலே பார்க்கறியா—மூட மனதுடைய (எ)

இந்த ஸம்ஸாரமதின்—இடுக்கணிலே நின்று
முந்திப் பிந்திப் போகாமல்—விழிக்கின்றோமே ஐயோ
சுந்தரனை நினைத்தால்—சோக மிகவருமெம்
அந்தரங்க நாதனே—அன்புடன் துதிக்காத (எ)

கீர்த்தனம். 28.

ராகம்: ஸித்தரஞ்சனி. தாளம்: ரூபகம். மெட்டு: பக்தியா.

ப:-இனிமேலே கதிஉண்டோ—இந்த உலகில் எனக்கு (இ)

அ:-கனி அருந்தின செவ்வாய்—கண்ணனே உன்னையல்லால் (இ)

ச:-தனியாகத் தவிக்கிறேன்—தாமரைக் கண்ணனே உன்
தொனிதன்னைக் காட்டாயோ(என்)—தொந்தரவை நீக்காயோ (இ)

உன்னை நினைக்கிலேன்—ஒரு நாழிகையாகிலும்
என்னைநீ கைவிடாதே—ஏ தீனபந்தோ (இ)

மங்கை கோபியரின்—மனத்திலே வஸித்தாயே
செங்கமலம் தவிக்கும்—செய்தியைக் கேளாயோ (இ)

கீர்த்தனம் 29

ராகம்: மத்தியமாவதி. தாளம்: ஆதி.

ப:-கண்டுமன மகிழ்வேனோ—கண்ணன் கானத்தை
உண்டு உயிர்தரிப்பேனோ (க)

அ:-அண்டர்கள் பூஜிக்கும்—அநாத ரக்ஷகனும்
தொண்டர் செவிக்கின்பமாய்—தொனிசெய்யும் குழலினை (க)

ச:-பண்டை நாள் பூமிதன்னில் பரவிநின்ற
பக்தகோடிகள் அறிந்தார்
மண்டலத்தினில் ஒரு—மா பாவியாய் ஜனித்து
தொண்டுபுரியாநின்ற— துரிசையாகிய நானும் (க)

கீர்த்தனம் 30 ராமாவதாரம்.

ராகம்:கல்யாணி. தாளம் : த்ரிபுட.
மெட்டு : நிதிஸாலாஸுகமா.

ப:-உனது மகிமைசொல்ல என்னால் தாமா ராம (உ)

அ: விண்ணில் தேவர்கள் துதித்து நிற்கவே
மன்னன் யாகத்தில் வந்துதித்தாயே. (உ)

ச:-அன்னை கௌஸலை வயிற்றில்—அன்புடனே தோன்றினையே
பின்னே தம்பியர் பிறந்திருக்கவே—சின்னவன் போலச்
சிரித்திருந்தாயே
அன்னை மாருன்னைக்கண்டு களிக்கவே—மண்ணில்
ராக்ஷஸர் மடிந்து மரிக்கவே
செந்நெல் அயோத்தி செழித்திருக்கவே—மன்னன்கண்டு
மகிழ்ந்திருக்கவே (உ)

அநுதினம் யாகங்கள் செய்ய—துணிவுள்ள ராக்ஷஸர்
கொய்ய
சினங்கொண்ட மகாமுனிவர்—தனங்கொண்ட அயோத்தி
செல்ல
கனமுள ராமா உன்றனை அழைக்க—மனமுருகியே
மன்னனு மறுக்க
இனமுள வசிஷ்டர் இருவரைக் கொடுக்க—வனத்தில்
தாடகை வருந்தியே மரிக்க (உ)

எல்லா ரிஷிகளும்கூடி—ஸல்லாபமாய் யாகம் செய்ய
பொல்லா மாரீசனும்வர—கொல்லாமல் அவனைவிட (எதிர்)
நில்லாத சுபாகு உயிர்கெட— உல்லாஸமாய் முனிவருடன்
நாட
கல்லைத் தூளியால் பெண்ணுருவாய்விட—வில்லைமுறித்து
ஜானகியைக்கூட (உ)

கீர்த்தனம். 31. வீதிவருதல்

ராகம் : லதாங்கி. தாளம் : ஆதி. மெட்டு : அபராதமுல.

ப:-மாதவனே உந்தன்—மலரடி காண
ஆதரவு[illegible]னே—அருள்புரிவாயே. (மா)

அ:-ஜோதிமயமாக—ஜொலித்திடும் நாதா
வீதியினிலே—விளையாடிவந்த (மா)

ச:-காயமே மெய்யென்று—கருத்தினில் எண்ணி
தீயமார்க்கம் சென்று—திண்டாடுகின்றேன்

மாயவலையை—மறைத்து உன்றனை
வாயாரவே—வர்ணிக்கச் செய்வாய் (மா)

சங்கு சக்ரம் கதை—சார்ங்க மணிந்து
சம்பகாரண்யத்தில்—சிறக்கவே நின்றாய்
எங்கும் நின்ற பக்தர்—ஏராளமாய்வர
செங்கமலத்தோடு—ஸேவை ஸாதித்தாயே (மா)

கீர்த்தனம் 32. ஏக ஸிம்மாஸனம்.

ராகம் : நடபைரவி. தாளம் : ஆதி. மெட்டு: சேதுலாரா.

ப:-சேத்திமண்டப—சிங்காரத்தை—ஸேவிப்போம் வாரீர் ()

அ:-சித்திரப் பதுமையும்(நவ)—ரத்னக் கால்களும்
பத்தரைமாற்றுப்—படியும் துலங்கும் (சே)

ச:-ரம்பை ஊர்வசி நடனம் ஆட
தும்புருநாரதர் கீதங்கள் பாட
எம்பிரானும் நின்றிட—ஏகஸிம்மாஸனத்தில்
சம்பக மன்னார்தேட—செங்கமலமும் கூட (சே)

கீர்த்தனம் 33.

ராகம்: ப்யாகட, தாளம்: ஆதி. மெட்டு: அபிமானமே.

ப:-பார்க்கப்பதினு—யிரங்கண்போதுமோ

பால கோபாலன்—பள்ளியறை ஸேவை (பா)

அ:-சேத்திதன்னில் தாயார்—மூர்த்தி எதிர் நிற்க
நேர்த்தியுள்ள ஏக—ஸிம்மாஸனந்தன்னில் (பா)

ச:-அச்சுதன் கரத்தில்—பச்சைக்கிளி நிற்க
அச்சமில்லாமல் என்—அன்னை உடன் பேச
கச்சத்தில் தாம்பூலக்—கறைகள் துலங்க
இச்சையுள்ள பக்தர்—எதிரினில் நின்று (பா)

எம்பிரானும் அதில்—இன்பமாய் இருக்க
சம்பகமன்னரின்—சிம்மாஸனந்தன்னில்
மங்கையுடன் நாதன்—மகிழ்ந்தும் இருக்க
செங்கமலம் தேடி—சேவடிபணிந்து (பா)

கீர்த்தனம். 34 ஊஞ்சல்.

ராகம் : காபி. தாளம்: ஆதி.

ப:-பாடிடுவோம் வாரீர்—பார்தன்னிலே யுதித்த
பாவையரே நாம் எல்லோரும் (பா)

அ:-பாடிடுவோம் வாரீர்—பாலகோபாலன் தன்னை
தேடிப்பிடித்து நாமும்—திகைக்காமலே நின்று (பா)

ச:-கூடிடுவோம் வாரீர்—பூ பாலனுகிவந்த
கோபாலனிடத்தினில்
ஆடுவான் டோலைதன்னில்—அன்பு மிகுந்தவனும்
வாடி வருந்திடாமல்—வனப்பு மிகுந்தவனை (பா)

மண்ணினில் வந்தோமே—மாதவன் மலரடியின்
ஜோதிதன்னைக் காணுமலே
பெண்ணுய்ப் பிறந்தோமென்று—எண்ணங்குழைய
வேண்டாம்
பண்ணின வினைதீர—கண்ணன் பாதமலரை (பா)

பொங்கி மகிழ்ந்திடுவோம்—பங்கயக் கண்ணன் பாதத்தில்
தங்கிய மனத்துடனே
எங்கும் நிறைந்தவனும்—திங்கள் மதிமுகனை
அங்கமுருகிவந்து—செங்கமலத்துடனே (பா)

கீர்த்தனம் 35.

ராகம்: நாதநாமக்கிரியை. தளம்: ஆதி.

ப:-ஆடினாரே கோபாலன்—ஆநந்தமாக டோலை
ஆடினாரே கோபாலன்—ஆநந்தமாக. (ஆ)

அ:-வேடிக்கையாய் ருக்மணி ஸத்ய—பாமையுடனே
கூடியே குதூகுலமாய்—கொண்டாடி மனமகிழ்ந்து (ஆ)

ச:-கூடகோபுரம் அமைந்த—கோயிலுக்குள்ளே
மாட மாளிகை போலொத்த—மண்டபத்திலே
ஈடெதிர் இல்லாத ரத்ன—ஊஞ்சலின் மீதே
கோடிசூர்யர் உதித்தாற்போற்—குதித்துக் குதித்துக்
கொண்டு (ஆ)

மல்லிகை முல்லைரோஜா மரு—மாலையைப்பூண்டு
எல்லையில்லா ஆடையாப—ரணமணிந்து
நல்ல பரிமளகந்தம்—எங்கும் வீசவே
சொல்லரிய காந்திபெற்ற—சுந்தரவல்லியுடனே (ஆ)

பச்சைநிற மேனியும்—பளிங்கு மஞ்சமும்
இச்சையுள்ள தேவிமாரும்—இந்த்ர போகமும்
உச்சிதமாய்ச் சந்திரனும்—மகிழ்ந்தொளிர்வதும்
அச்சுதனுக் கேற்குமென்று—பக்தர்கள் பூரித்துநிற்க (ஆ)

வாழுமந்த ஹாஸத்தோடு--வாஸுதேவனும்
சூழுமிந்தப் பூமியில்—துரைத்தனம் செய்ய
தாழு மானிடரைக் காக்கும்—தயவுடனே
ஏழாம் நாள் செங்கமலமும் —இன்பமாய் எதிரில் நிற்க(ஆ)

கீர்த்தனம் 36.

ராகம்: இந்தோளவஸந்தா. தாளம்: ரூபகம்.
மெட்டு: ராரஸீதா.

ப:-வாடிதேவி—வனமாலிசூடி—ஆட (வா)
அ:-ஆடிடுவோம் நன்றாய்—நாடி எந்தனுடன் ஆட (வா)

ச:-கந்தர்வர்கள் வந்து—கானம் செய்துகொண்டு
மந்தஹாஸமாக ரத்ன—மாலே சாத்த வந்துள்ளாரே (வா)

வஜ்ர வைடூர்யங்கள்—இழைத்த டோலேதன்னில்
உச்சிதமாய் ரம்பை முதல்—ஊர்வசியின் நடனம்காண (வா)

எங்கும் இணையில்லா நவ—சித்ரமண்டபத்தில்
செங்கமலம் நீயும் சேர்ந்து—எந்தன் முன்னால் நிற்க (வா)

கீர்த்தனம்: 37.

ராகம்: அடாணா. தாளம்: ரூபகம்.
மெட்டு : மானே அங்கே போனவகை.

ப:-ஊஞ்சலாடுறார் கோபாலன்— ஊஞ்சலாடுறார் (ஊ)
அ:-ஆஞ்சநேயரைமுன்—அடிமைகொண்டவர்
பாஞ்ச சன்யம் ஊதி—பாண்டவரைக் காத்தோர் (ஊ)

ச:-பஞ்சணை டோலையில்—பாங்குடன் நின்றிட
வஞ்சிக்கொடியாளும்—கொஞ்சிக் குலாவிட
அஞ்சன வண்ணன்—அழகுடன் பார்த்திட
பஞ்சமா பாதகர்—பாபங்கள் தீர்ந்திட (ஊ)

மங்கை யிருவர்கள்—மாலைகள் சாத்தவே
கொங்கை யசையக்—கவரிகள் வீசவே
சிங்காரித்த நவ—ரத்னப் பலகையில்
செங்கமலத்துடன்— அங்கம் பூரித்துமே (ஊ)

கீர்த்தனம் 38.

ராகம் : ஆநந்தபைரவி. தாளம் : ஆதி.

மெட்டு : மகுடாபிஷேகம் கொண்டாரே.

ப:-ராமாவதாரங் கொண்டாரே—ராஜகோபாலன் (ரா)

அ:-ராமாவதாரங்கொண்டார்—ராஜீவ நேத்ரனும்
க்ஷேமமாகக் காத்திருந்தார்—நெஞ்சிற் குடிகொள்ளவே (ரா)

ச:-பக்கத்து நாச்சியாரோடு—ஏழாம் நாளிலே
பக்குவம் ஆகின்றுரே
தக்கவள் ஆன எந்தன்—தாயாரும் முன்னால் வர
அக்கோலம் கண்டவர்கள்—அரும் பாவங்களும் தீர (ரா)

பஞ்சக் கச்சங்கள் தரித்தார்—பால கோபாலன்
பட்டும் ஜரிகையுமாக
கொஞ்சும் திருமார்பில்—குலுங்க நகை தரித்து
தஞ்சமென் றடைந்தோரை—அஞ்சாதீர் என்று காக்க(ரா)

39. கண்ணிகள். (மோஹனாவதாரம்)

ராகம்;சங்கராபரணம். தாளம்;ரூபகம். மெட்டு:
போன்னார்மேனி

பெண்ணாய் நின்றவனே தங்கப்—பின்னல் ஜடைதரித்தே
உண்ணாதுந்தனையே ஓதி—னோர்க்கெதிர் நின்றவனே
எண்ணாத எண்ணினேன் உந்தன்— இணையடிசேர
கண்ணா களிகூர்ந்தேன் எந்தன் — கவலைகள் தீர்ந்தேன்

ராகம்: பந்துவராளி. தாளம்: ரூபகம்.

பக்திப்பழமான பன்னிரண்—டாழ்வார்கள் கூடி
முக்திபெறவேண்டி—மோஹனா உன்னைத்தேடி
யுக்தியாகத்தம்மைப்பாலே யுவதியாக வெண்ணி
சக்தியாகவே பாமாலை—ஸரம் ஸரமாய்க்கட்டி

ராகம் : சாரங்கா—தாளம் ரூபகம்

பதியாக உன்னையெண்ணிப்—பாய்ந்து பாமாலைபாட
அதியானவுடன் கட்டி—அணைத்து நின்றவனே
எதிராஜரிதை வெகு—இன்பமுடன் செய்ய
மதிமோஹனா நீ கண்டு—மகிழ்ந்து நின்றனையே

ராகம்: பைரவி. தாளம்: ரூபகம்

எங்கும் நின்ற பக்தர் உன்னோ—டிருந்தனுபவிக்கச்
செங்கமலக் கண்ணா நீயும்— சேர்ந்திட எண்ணங்கொண்டே
சிங்கம்போல் வடிவா நீயும்—சிறுபெண் கோலம்பூண்டு
அங்கம் குளிர்ந்தவரைச் சேர்ந்து—ஆநந்தங் கொண்டிருந்தாய்

கீர்த்தனம். 40

ராகம்: தோடி—தாளம்: ஆதி.

ப:-எந்தன் மதி கலங்குதே—இந்திர ரூபனின்
சுந்தரி ரூபங் கண்டு (எ)

அ:-முந்தி எனக்கிவள்—ஸொந்தத் தலைவியோ
இந்து வதனம் விட்டு—எழும்பவில்லையே கண்கள் (எ)

ச:-முன்னம் மோஹனவதாரம்—கொண்டவன் இன்று இங்கு
அன்னம்போலமர்ந்து யாழை—மீட்டியே வீற்றிருக்க
கன்னம் நின்றோர் மின்னல் வந்தென்—கண்களைப் பறித்தது
இன்னும் மற்றோர் இடம்காண—இயலாமல் நின்றது (எ)

பாதமலர் கண்டவர்கள்—பாத மலரே கண்டார்
ஜோதி முழந்தாளைக் கண்டோர்—சுற்றி யதையே கண்டார்
பாதி ரூபமாகிலும்—பார்ப்போமோ என்றார் சிலர்
மாதென்று சொன்னாரே யல்லால்—மற்றொன்றுங் காணா நின்றார் (எ)

சீர்கொண்ட கோபாலன் ரூபம்—செப்பவென்றால் அப்
பேர்கொண்டோர் அலங்கரித்தால்—பிழையொன்று வருமோ
ஊர்கொண்டோர் கண் எச்சில் வந்துன்—ஒளியைத் தீண்டுமோ
பார்கொண்டோரைப் பாதுகாக்கும்—பாவை செங்கமலக் கண்ணா (எ)

கீர்த்தனம். 41

ராகம்: கமாஸ்—தாளம்: ஆதி.

ப:-மதி மோஹனு மனம் தாளலே—கதி நீ யடா கிருஷ்ண வாடா

அ:-புதிதல்லவென் புறம்போகாதே—குதித்துந் துதித்தேன்
விதிமாற்றுவாய் உன்
கூட ஓடி ஆடுவேன்—ஓடமேறிப் பாடுவேன்
நாடுவீடு போடுவோம்—காடு தேடி ஓடுவோம் (ம)

ச:-பற்பல அற்புதம் பார்த்திடுவோம்—கற்பகப்பொற்பனைக்
கண்டிடுவோம்
சொற்பல விற்பனை செய்திடுவோம்—கற்பு அதன்
நற்பயிர் கண்டிடுவோம் (ம)

(உன்னை) காண எண்ணி மனம்—தோன்று மார்க்கம்
செல்லுதே—செல்லுதே—செல்லுதே
(உன்னை) ஆணோ பெண்ணோ வென்று அறியாமல்
வேகுதே—வேகுதே
பாணமொன்று வசமோதி ஏவினையோ
கோணிடாமல் உந்தன்—வேணுகானம் செய்தாயோ
செய்தாயோ
(அட) ஏதோ உன் சூது (ஒரு) மாது உடன் வாது
எனக் கெட்டாதவா நீ கிட்டி—(என்)-மட்டி மனத்தைக்
கொட்டி
எனைத் தட்டித் தவிக்கவிட்டு (நீ) பொட்டென்று ஒளிந்
திட்டால் (ம)

கீர்த்தனம் 42. திருக்கார்த்திகை
ராகம் : ஜயந்தஸ்ரீ — தாளம் : ஆதி.

ப:-பார்த் தவர்க்கன்றோ பாக்யம்—இதைப்
பார்த் தவர்க்கன்றோ பாக்கியம்

அ: கார்த்திகையில் கண்ணன்—காதலியருடன்
நேர்த்தியாக நிற்கும்—பூர்த்தியான வடிவை (பா)

ச:-இருபுறமும் மாதர்—இடைவிடாமல் நிற்கத்
திறமுள்ள நாதன்—தேவிதன்னை அழைக்கப்
பருவமுள்ள என்தாய்—பதியைக் கண்டுகளிக்கத்
திருமுகத்தைப் பார்க்கத்—திங்கள் எதிர் ஜொலிக்க (பா)

அவசரக் கல்யாணம்—அன்று செய்துகொண்டு
அவசரமாய் நலங்கை—அவனும் இன்று கொண்டான்
கவச குண்டலத்தோன்—களிப்பாய் எழுந்தருளிப்
பவஸாகரத்தைப்—பறக்கச் செய்ததை (பா)

முற்றவெளி நின்று—முன்வாசலில் வந்து
பத்திப்பந்தம் சுற்ற—பச்சைப் பிடிபோல
சுத்த பத்தினியுடன்—சொர்க்கப் பானை கொளுத்தி
எக்காலமும் விளங்கும்—இறைவன் திருவருளை (பா)

மன்னன் கோபாலனும்—மணமாலை சூடிச்
சின்ன விளையாட்டைச்—சிறக்க இன்று செய்யக்
கண்ணாடிபோல் மதியைக்—கரத்தால் செங்கமலமும்
முன்னால்நின்று காட்ட—மோஹித்தவர் நிற்க. (பா)

கீர்த்தனம் 43. உடலெடுத்த பெருமை.

ராகம் : ஜயநாராயணி. தாளம்: ஆதி. மெட்டு:
மன வினிவினுமா.

ப:-உடலைப்பழிக்காதீர்—உலகினில் உள்ளோரே (உ)

அ:-கடலைப்போல் அலைவரும்—கலியுகம் தன்னிலே
சுடலைக்குப்போகும் முன்னே—ஜோதியைக்காணும்
இந்த (உ)

ச:-கொடுமைகளைச்செய்து—கோடிஜென்மம் எடுத்தோம்
தடுமாறி நிற்கையில்—தயவுகொண்டே நம்மேல்
மடபுத்தியில்லாத—மானிட ஜென்மத்தை
கொடுத்து ரக்ஷிக்கும் அந்த—கோபாலனுக்கு ஸொந்த (உ)

அற்ப சுகத்தைக்கண்டு—ஆநந்தக் கூத்தாடுவோம்
துக்கத்தைக் கண்டுவிட்டால்—துடித்து விழுந்தழுவோம்
சொற்ப குணத்தினாலே—சோர்வடையும் நெஞ்சில்
கற்பகத்தரு நின்று—காத்துவரும் இந்த (உ)

சிரஸை அளித்தான் அவன்—சேவடியைப்பணிய
கரத்தை அளித்தான் அவற்—காள்செய்யவேண்டு
மென்றே
ஹ்ருதயத்தை அளித்தான் அவன்—எப்பொழுதும்
வஸிக்க
திறமுள்ள காலைத்தந்தான்—தேவாலயங்கள் சுற்ற அவ் (உ)

அழுக்கான நம்மனத்தை—அலம்புவான் கங்கையினால்
வழுக்காமல் நாற்புறமும்—வளர்ப்பான் திருமந்திரம்
கொழுந்து விட்டெரியும்—கோபால விளக்குடன்
செழுமையாம் செங்கமலம்—சேர்ந்து ஜொலிக்கும் இந்த
(உ)

கீர்த்தனம் 44.

ராகம் : பிலஹரி. தாளம் : ஆதி.

ப:-வீடே ஈதொரு நல்ல வீடே—சரீரமான
வீடே ஈதொரு நல்ல வீடே. (வீ)

அ:-கூடாரமான இதில்—கோவிந்தன் வசிக்கிறான்
மேடுபள்ளமுடைய மும்மூன்று வாசலுள்ள (வீ)

ச:-காடுதன்னிலே சென்று—கானம் செய்தோனும் கண்டு
மாடுகன் றெல்லாம் கொண்டு—மாதர் இடையே நின்று
ஆடிப்பாடி மகிழ்ந்து—ஆயாஸம் தீர்க்க என்று
நாடி யிதுள் புகுந்த—நாரணனுக்கு ஸொந்த (வீ)

கீர்த்தனம் 45.

ராகம்: கீரவாணி தாளம்: ஆதி.

ப:-உன்னருளை யல்லால் மற்றொன்றும் வேண்டேன்
ஓகோ ஜெகதீசா (உ)

அ:-முன் னருள்வாயே முன்வினை தீரப்—பின்னருள் வாயே
பிறவிநோய் தீர (உன்)

ச:-நின்னது இதுவென்று—நினைப்பதொன் றல்லால்
இன்னதென் றறியாமல்—ஏங்கித் தவிக்குதே
சின்னதென் றிதன்—செய்தி கேளாவிடில்
என்ன இருக்குதடா—இங்கினில் வேறு (உன்)

மயர்வற மதிநலம்—அருளிய மாலே
வயிறு வயிறென் றிது—வரை கெட்டதாலே
உயர்வரும் உன்னொளியை—உணர்ந்திடா மலே
அயர்வடைந்து போச்சுதே—ஹரே முகுந்தா (உன்)

கீர்த்தனம் 46.

ராகம் : கரபி. தாளம் : ஆதி.

ப:-கண்டு களிப்ப தெந்நாளோ—கருமுகில் வண்ணனை நான்
கண்டுகளிப்ப தெந்நாளோ—(க)

அ:-மண்டலத்தினில் வந்த—மாதர்கள் நாம் எல்லோரும்
தொண்டு புரிந்து—துரையை விட்டகலாமல் (க)

ச:-அண்டர்க் கதிபதி யானுன்—(நம்) அந்தரங்க வாஸன்
அண்டர்க் கதிபதி யானுன்—(நம்) ராஜமன்னுர் வாஸன்
பண்டைவினையை நீக்குவான்—பக்தர்கள் மீதிரங்கிப்
பண்டை வினையை நீக்குவான்,
செண்டுபோ லாடிடுவான்—ஜென்மச் சிறுமை யெல்லாம்
விண்டிடாமல் நாமும்—வேகமாய் ஓடி ஓடி (க)

மண்ணும் மனையும் வீணடா—(உன்) மலரடி படாத
மண்ணும் மனையும் வீணடா—(உன்) மலரடி காணுத
கண்ணும் கருத்தும் வீணடா—(இந்தக்) கலியுகக் காட்சி
காணும்
கண்ணும் கருத்தும் வீணடா,
உண்ணும் உணவும் வீணடா—(உனை) ஓதாமல்
எப்பொழுதும்
பெண்ணுன ஜென்மம் வீணடா—(உனை) பேணுத பாவி
யான பேதை நாங்கள் எல்லாரும் (க)

கீர்த்தனம் 47.

ராகம் : குந்தலவராளி. தாளம் : ஆதி. மெட்டு : கலினருல.

ப:-என்ன நான் செய்குவேன்—எங்களுடைய நாதா—
ஏதீன பந்தோ— (எ)

அ:-முன்னாளில்செய்தபாவத்தால்-மூழுகினேன்ஸம்ஸாரத்தில்
என்னுருயிர் தந்தளித்தீர்—ஏற்றுவீர் கரை தன்னில் (எ)

ச: திருமோ கவலை உம்—திருவடி போற்றுமல்
போருமோ இந்தப்—பொல்லாத இடும்பை
கூறும்படியே செய்வீர்—குணு திசயங்களை
பாருமே கடைக்கண்ணுல்—பரமபுருஷனே இப்போது (எ)
தாளவில்லை ஐயோ உம்—தரிசனம் செய்யாமல்
மாளவில்லா இல்லத்தில்—மன்றுடு கின்றேனே
வாளா இருந்தேன் உம்மை—வர்ணிக்க முடியாமல்
ஆள வருவீரோ—அடிமை செங்கமலத்தை (எ)

கீர்த்தனம் 48.

ராகம்: கீரவாணி. தாளம்: ரூபகம். மெட்டு: பூவுலகுக்கு.

ப:-சுற்றிச் சுற்றி வந்தென்னை உன்
ஜோதிக்கே ஆட்கொண்டாயோ
இத்தனைக்கும் வல்லனோ—ஏ எம்பெருமானே நான் (சு)

அ:- இத்தனை பேர்களுக்—கெதிர் என்னைக்காட்டிப்
பெற்றவனே என்மேல்—ப்ரீதி மிகக்கொண்டு (சு)

ச:-தினமும் உந்தனுடைய—திருவடி போற்றிலேன்
மனம் உருக உன்னை—மனத்தாலும் நினைத்திலேன்
கனம் பொருந்திய கண்ணன்—ஆதலால் நீயும் உன்
இனத்தவரோ டென்னை—எளிதில் சேர்க்க எண்ணி (சு)

கீர்த்தனம்: 49 கோலாட்டம்

ராகம்: தர்பார். தாளம்: ஆதி

ப:-இணையடி துதிக்க என்னால் ஆமா—உன்பொன் (இ)

அ: அணைகடந்த வெள்ளம்—போலப்புரளும் உந்தன் (இ)

ச:-கணைக்கால் தண்டை—சிலம்பு கலீரென
மணைமீதில் வீற்றிருக்கும்—மன்னா உம்மை
பணைத்தோள் இள ஆய்ச்சியர்—பாய்ந்து வந்து
புணைத்துக் கொண்ட பூர்ண—சந்த்ர முகத்தாய் உந்தன் (இ)

கன்னி கோபியர் உந்தன்—முன்னால் நின்று
உன்னைக் கூவியழைக்க—ஓடிச்சென்றாய்
பன்னகத்திற் படுத்த—பரந்தாமா
சின்னஞ் சிறியேன் போல—சேர்ந்து குதிக்கும் உந்தன் (இ)

துலா மாஸத்தைக் கண்ட—பூபாலனே
நீல நிறத்து ராஜ—கோபாலனே
கோலாட்டம் போட்டு நின்றாய்—கோபிமாருடன் கூட
மாலா லங்காரங் கொண்ட—மந்தஹாஸனே உந்தன் (இ)

தாஸிமார்களும் வந்து—முன்னால் நிற்க
நேசத்துடனே கோலாட்—டங்கள்போட
மாசிலா என்னைப் பெற்ற—மாதா செங்கமலத்துடன்
ஆசிகள் கூறி என்னை அடிமைகொண்ட உந்தன் (இ)

50. கண்ணிகள்

ராகம்:- மோஹனம். தாளம்.

எங்கும் நிறைந்திருக்கு தெள்விழ இடம் இல்லாமல்
இன்ப ரஸமாம் உன்தன் ஜோதி
சிங்கமதை வெல்லும் சிறந்த புஜபலமும்
சிங்கார வடிவமும் சிரித்த முகமும் (எ)

நெரித்த புருவமதைத் தெரிந்திடக் காட்டியே
சிறந்து விளங்குகின்றாயே—நான்
மறந்து விட்டாலும் நீ மறையாமல் எதிர் நின்று
அறிந்திடச் செய்கின்றாயே அதை யென்சொல்
வேன் (எ)

ஆறு பெருக்கென்பர் அவனியி லெல்லோரும்
அதுவு மொருகால் வற்றுமே உன்
பேறு பெருக்கின் பெருமையை யென் சொல்வேன்
பெருகும் பெருகும் மேலே வற்றா தொருக் காலே
(எ)

பேரின்ப வெள்ளமுன்னை யாருள்ளுக் கொள்ளுவார்
பெருஞ் ஜோதிச் சுடர் ஒளியே
நேரின்பங் கொடுப்பவர் நின்னையல்லால் வேறில்லை—என்
நேயனே நேயனே நீலமணியே (எ)

பாரினில் யான் பரதேசியல்ல உன்னைப்
பற்றிக் கொண்ட பிறகே நீ
மார்பினில் மங்கையொடு மற்ற மைந்தர்களையும்
மகிழ்ந்து அணைக்கக் கண்டேனே (எ)

கீர்த்தனம் 51. பிர்ம்மோத்ஸவ வைபவம்

ராகம்: விஜயஸ்ரீ. தாளம்: ஆதி. மெட்டு: வரநாரத.

ப:-பிர்ம்மோத்ஸவப்—பெருமையைக் கேளீர்
புண்ணிய ஸ்தலத்தில்—புரிந்திடுகிற திவ்ய (பி)

அ:-துர்மார்க்கர் துயர்கள்—தீர்ந்திடும்
தர்மங்கள் பெருகிடும்—தாழ்வுகள் குறைந்திடும் (பி)

ச:-கர்ம பூமியில்—களிப்புடன் ஜனித்தோம்
கண்ணன் பாதத்தைக்—கருதிடாமலே
மர்மத்தை—மாதவனும் அறிந்து
மானிடர் அறிய—ஜோதியாய் எழுந்தருள் (பி)
உத்ஸவ காலத்தை—உலகில் உள்ளோர் அறிந்து
விஸ்தாரமாய் மன்னர்க்கு—விரைவுடனே வர ஸ்ரீ
வத்ஸாங்கன்—சீக்கிரமாய் அவர்க்கு
செங்கமலத்துடனே—ஸேவை ஸாதித்து நின்ற (பி)

கீர்த்தனம் 52.

ராகம்:ஆனந்தபைரவி. தாளம்:ஆதி. மெட்டு: நீ மதிஸல்லக.

ப:-கானில் கன்றுமேய்த்த—கண்ண உன் வடிவை
மீன மாஸத்தில்—கண்டால் போதுமே (கா)

அ:-மானிடர்கள் வந்து—மகிழ்ந்து உத்ஸவம் செய்ய
வானில் நின்ற தேவர்களும்—வந்தமர்ந்திட

சி:-தானந்தருமம் தயவுடன் அனைவரும் கொடுக்க
மனமிரங்கிப் பால்தயிர் பழமுதல்
பானம் பண்ணவென்றே பலதினுஸிலும் தண்ணீர்ப்
பந்தல்களும் பரிவுடன் அமைக்க

தீனர்களும் அதில் திருப்பணிகளும் செய்ய
வேணவர்கள் வந்திட, வீதியில்
தோரணங்கள் தொங்கிட, வாணங்கள் மின்னிட,
ஆனைசென்றிட, கானங்கண்டிட, போனவர் பொங்கிட (கா)

ச:-மாதா பிதாகுரு—தெய்வம் கோபாலன் அல்லால்
பேதையர் நமக்குப்—பெருங் பதம் வேறில்லை
சூது நினைக்கும் இந்த—ஸொப்பன ப்ரபஞ்சத்தில், அ
ஞைதையான மைந்தர்மீதில்—அருள்புரிந்த

சி:-நாதன்வர நீதியாய் துந்துபியடித்தார்
சல்லரி பேரிமல்லரி யெக்காளமுடன்
மேதினி குலுங்க மேளம் பாண்டு வாத்தியங்கள்
முன்னால் சென்று பந்தலில் முழங்க
சூதிலாதவர் சென்று ச்ருதியுடன் பஜனிக்க
ஸாதுக்களும் மகிழ்ந்திட, எங்கிலும்
மாதர்கள் கோலம் எழுதிட, வேதங்கள் ஓதிட, (கா)
ஜோதிமின்னிட, ராஜன்வந்திட, செங்கமலத்துடன்

கீர்த்தனம் 53

ராகம் : ராமப்பிரியா. தாளம் : ஆதி.

மெட்டு : கோரினவரமு.

ப:-கோரினவரத்தைக் கொடுப்பவன்—கோபாலனும் தானே
(கோ)

அ:-பாரிலுள்ள பாமரங்காள்—வாரீர் மன்னர் வாஸனிடத்தில்
(கோ)

ச:-ஹரியும் வைகுந்தந் தன்னில்—அன்று வசித்தான் சிந்தை மகிழ்ந்து
பரிஜனங்கள் படும் துயரை—பார்த்துப் பூமியில் வந்துதித்தான்
தெரிந்திடப் பங்குனி தன்னில்—தெளிவுடன் உத்ஸவம் கொண்டான்
சரியாக அவனைத் தேடி—சாஷ்டாங்கமாய்ப் போய் ஸேவித்தால் (கோ)

பாரினில் நாம் வஸித்திருக்க—பலவகையில் பாடு பட்டான்
கோரி நல்ல கதி யடையக்—குருவாகியே உபதேசித்தான்
ஆரியரே நாமெல்லோரும்—அறியாத்தனம் தன்னைவிட்டு
தேறியே செங்கமலத்தின்—திருவடியைப் போய் ஸேவித்தால் (கோ)

கீர்த்தனம்: 54. உத்ஸவ திருமஞ்சனம்.
ராகம்: சங்கராபரணம். தாளம்: ஆதி.
மெட்டு: ஸ்வர ராகஸுதா.

ப:-திருப்பாற் கடல் மேல்—தீனசரண்யன் பாதா
திருமஞ்சனம் பாரீர்—ஓ கண்காள் (தி)

அ:-பெருமையாய் விளங்கிடும்—பங்குனி உத்ஸவத்தில்
அருமையாம் மண்டபத்தில்—அனைவரையும் ரக்ஷிக்க (தி)

ச:-தர்மபுத்ரர் தோழன்மேல் தகுந்த தென்றலும் வீச
பர்வ காலங்கள் கண்டு—பக்தர் எல்லாரும் சேர்ந்து
பரிமள கந்தம் பன்னீர்—பாலும் பஞ்சாம்ருதமும்
கருணையுடனே நிற்க—கணக்கில்லா இளநீரால் (தி)

பஞ்ச கலயங்களை—பச்சமுந்த்ரி மேல்வைத்து
தஞ்சமென்ற தீக்ஷதர்—தூபதீபங்கள் காட்டி
மஞ்சன மாட்டிநின்றார்—மன்னன் கோபாலனுக்கு
அஞ்சன வண்ணன் நின்றான்—அன்னை செங்கமலத்தை
விட்டு (தி)

கீர்த்தனம் 55. துவஜாரோஹணம். முதல் உத்ஸவம்.
ராகம்: சக்ரவாஹம். தாளம்: ஆதி.

ப:-த்வஜாரோஹணம் செய்தாரே-தொல்லுலகோர் ஸேவிக்க
(த்வ)

அ:-துங்க நவமணிகள்—எங்கும் ப்ரகாசிக்க
கோடி சூர்யனைப்போல்—கொடிச்சப்ரமீதிலே (த்வ)

ச:-விவர நீலத்திலும்—கோமேதகத்திலும்
விலையில்லா மாணிக்க—விளக்கும் ஜொலித்திட
தவளப் பளிங்குபோல்—வீதி விளங்கிட
தவறாமலே நாலு—தெருவுகளிலும் சென்று (த்வ)

பவளச் சப்பரந் தன்னை—பாலர் வடம் பிடிக்க
நவக்ரஹ தேவதைகள்—நகரைக் காவல்கொள்ள
பவ நாசனை உன்னோடு—பக்கத்தில் மாதர் நிற்க
தவத்தைப் புரிந்தோர் நல்ல—பதத்தை விரும்பி நிற்க
(த்வ)

தேட்டையாக அன்று—வேட்டு முழங்கிட
கேட்டவுடன் அநேகர்—கூட்டமாய் வந்திட
நீட்டமான வீதியில்—வாட்ட மில்லாமல் செல்ல
தோட்டங் கொள்ளாத பூவால்-போட்டசப்பரத்தேறி(த்வ)

எங்கும் ப்ரகாசிக்க—மங்களகரமாக
அங்கம் குளிர்ந்து பக்தர்—ஆநந்தக் கூத்தாட
திங்கள் மதிமுகனும்—செங்கமலத்துடனே
சங்க த்வனி முழங்க—ஸகலரையும் ரக்ஷிக்க (த்வ)

கீர்த்தனம் 56. உத்ஸவம் 2. புன்னை வாஹனம்.
ராகம்: ஸிந்துபைரவி. தாளம்: திச்ர ஏகம்.

ப:-கண்கள் ஆயிரம் வேணுமே காசினியிலே (க)

அ:-கண்ணனும் வாரான்—புன்னை மீதிலே
மின்னலைப் பழிக்கும் இவன்–மேனியின் ப்ரகாசம் காண (க)

ச:-மண்டபத்தை விட்டுமே—புறப்பட்டு வாரான்
அண்டையில் உள்ளோர்—ஆநந்தங் கொண்டு
தொண்டுகள் புரியக் கண்ட-தாமணிவண்ணனைக் காண(க)

ராஜனுக்குச் சாத்தி நின்ற—ரோஜா மாலையை
நேசரே கேளீர் அதன்—வாஸனை தன்னை
ஆசையுடன் அங்கிலுள்ளோர்-பூஜை புரிந்ததைக் காண(க)

மங்கையே நான் கண்டதில்லை—இந்த மாலையை
எங்கிழைத்தாரோ—தங்க மயமாய்
பொங்கும் கோபாலன் தரிக்க-செங்கமலம் பார்த்திருக்க(க)

கீர்த்தனம் 57. இதுவுமது.
ராகம்: பைரவி. தாளம்: ரூபகம்.
மெட்டு: ஜயஜயகோ குலபால

ப:-யமுனை தன்னில்—இரண்டாம் நாளில்
எல்லாரோடும்—கூடி மகிழ்ந்தான் (ய)

அ:-அமுதத்தை — தேவர்க் கீந்தோன்
நமக்காக இந்—நாட்டில் வந்தோன் (ய)

ச:-குமரியான கோபியரோடு—கோலங் கொண்டு விளையாடு வான்
அமரரும் அறிந்திடாமல்—ஆடையெல்லாம் எடுத்தொளித் தான் (ய)

சின்ன விரலினாலே—சிறந்த குழலை ஊதி
புன்னை மரத்தி லேறி—கண்ணபிரான் ஸேவை தந்தான் (ய)

பாமணி ஆற்றில் இறங்கி—பலரும் பணிந்திடவே
பூமகள் களித்திடவே—பூலோகம் செழித்திடவே (ய)

மங்கையர் தவித்திடவே-(அவர்)பங்கங்கண்டு சிரித்திடவே
அங்கு இவனைப்பிடித்திடவே-செங்கமலம் களித்திடவே (ய

கண்ணி 58. இதுவுமது.

ராகம்:நீலாம்பரி. தாளம்: ஆதி. மெட்டு: பொன்னிவர்மேனி.

என்ன இவர் மேனி வைபவத்தை
எந்தனால் செப்பிடவே தரமோ?
மின்னலைப் பழிக்கும் ஜோதியுடன்
மேதினி களிக்க ஸேவை தந்தார். (1)

கன்னல் மொழியாம் கோபியர்கள்
காலடியில் நின்று சேலை கேட்க
என்னிட மில்லையென் றெதிர்பேசி
ஏளனம் செய்துமே வீற்றிருந்தார். (2)

தண்டை சிலம்புகள் சத்தமிட
தகுந்த வீரக்கழல் ஜொலித்திட
மண்டலத்தில் உள்ள மைந்தர்களின்
மனத்தைக் கவர்ந்து இடை நெளித்தார்(3)

எத்தனையோ ஜென்மம் நாம் எடுத்தும்
இந்த வடிவினைக்கண்டதில்லை
மத்த கஜம் போன்றவர் பாதத்தில்
சித்தங் கரைந்துமே செல்லுதம்மா. (4)
கோமளாங்கிகள் குளித்திருக்க
குதுகலித்தார் அன்று யமுனையில்
பாமணி யாற்றினில் பாவையுடன்
பரமாநந்தத்துடன் க்ரீடை செய்தார். (5)
ஒருவர்மேல் ஒருவர் ஏறி நின்று
ஒளித்த சேலை தன்னைக்கேட்டிடவே
பரந்தாமரும் அதைப் பார்த்து விட்டு
பரிகாசம் செய்துமே வீற்றிருந்தார். (6)

கீர்த்தனம் 59. உத்ஸவம் 3. ஹம்ஸ வாஹனம்.
ராகம் : ஸாவேரி. தாளம் : ஆதி.
மெட்டு : எந்த நேர்ச்சினு சபல.

ப:-ஹிம்ஸை தீர்க்கவே—எழுந்தருள்கின்றார்
ஸம்வத் ஸரந்தோறும்—ஸகல வித (ஹி)
அ:-கம்ஸனைக் கொன்றோர்—ஹம்ஸத்தி லேறி
ஸம்ஸார மான—ஸாகரத்தில் வீழ்ந்தோர் (ஹி)
ச:-வஸுதேவர் முன்னில்—நிசிவேளை தன்னில்
அஸுரரைக்கொல்ல—அவதரித்தவர்
பசுக்களைக் காக்கும்—பதியான நந்தன்
வசத்தில் இருந்த—வாஸுதேவனும் (ஹி)

மும்மூர்த்தி போற்ற—மூன்ரும் நாளிலே
செம்மையான முடி—ஜரிகையால் தரித்து
உம்பர் கோனும் ராஜ—அலங்காரங் கொண்டு
செங்கமலந் தேட—சிங்கார மாக (ஹி)

கீர்த்தனம் 60. உத்ஸவம் 4. கோவர்த்தன பர்வதம்.
ராகம்: உதயரவி சந்த்ரிகா. தாளம்: ஆதி.
மெட்டு: எந்தநோ்ச்சினு எந்து.

ப:-குடை பிடித்தார்—கோவர்த் தனத்தை
இடையரைக் காக்க—எம்பெருமான் நின்று (கு)

அ:-துடியாக இந்த்ரன்—துன்மதியினுல்
இடியோடு மாரி—எங்கிலும் சொரிய (கு)

ச:-நாவலர் போற்ற—நாலாம் நாளிலே
பாவலர் ஏத்த—பரிஜனம் பார்க்க
தேவர் கோன் கண்டு—திகைத்துமே நிற்க
ஸேவித்து நின்று—செங்கமலம் மகிழ (கு)

கீர்த்தனம் 61. உத்ஸவம் 5. பஞ்சமுக ஹநுமார்
ராகம்: நவரஸகன்னடா. தாளம்: ஆதி.
மெட்டு: பலுகுகண்ட.

ப:-அஞ்சன வண்ணு! அநந்த சயனு!
தஞ்சமென்றேன்—உன்னையே (அ)

அ:-பஞ்ச முகத்து ஹநுமார்—பக்திகொண் டழைக்க
அஞ்சாம் நாள் அவர்மேல்—அன்புடனே வந்த (அ)

ச:-பஞ்ச வடியில்—பாரியைப் பிரிந்து
மஞ்சன் லக்ஷ்மணனும்—மனங் கலங்க
வஞ்சித்த வாலியால்—வருத்தம் அடைந்தோன்
அஞ்சலி செய்ய—அபயம் அளித்த (அ)

அன்னை தந்தை—அன்பரும் நீ
மின்னலை ஒத்த—முகத்தோனும் நீ
பொன்னி செங்கமலம்—பூரித்தும் இருக்க
மன்னூரில் வந்து—மகிழ்ந்திருக்கின்ற (அ

கீர்த்தனம் 62. உத்ஸவம் 6. கண்டபேரண்டபக்ஷி.
ராகம்: பலஹம்ஸா. தாளம்: ஆதி. மெட்டு: தல்லிதன்ற
ப:-அண்டங்களை உண்டுமிழ்ந்த—நாதன் வருகின்றார்
கண்டபேரண்டபக்ஷி மேல்—கம்பீரத்துடனே ஏறி (
அ:-மண்டலந்தினிலே நின்ற—மறையோரே கேளீர்
கண்டவுடனே யிரு—கண்ணிணொளி மழுங்க

ச:-தண்டை சிலம்பணிந்த—தாள்களிலே வீர
கண்டையின் ஒளியினுல்—அண்டங்கள் ப்ரகாசிக்க
தொண்டர்கள் அதைக் கண்டு—தோத்திரங்கள் செ
வண்டினங்கள் மொய்க்கும் ரோஜா—மாலையில் மறை
வராய்

அங்கங்குளிர்ந்து அவர்—அழகினைச் சொல்ல
துங்க சேஷனும் ப்ரமித்து—தூரமே செல்ல
தங்கம் வைரம் ஜோதி தன்னை—தஹிக்கும் மேனியு
செங்கமலமும் பணிய—சிங்காரமாய் வீற்றிருந்து (அ)

கண்ணி: 63. உத்ஸவம் 7. காலே.
ராகம் : ஸிந்து பைரவி. தாளம் : ஆதி.
மேட்டு : சிவனே தெய்வம்.

ஆளும் பல்லாக்கன்று காலேயில் கண்ணன்
அலங்காரம் கொண்டதை ஸேவிப்போம் வாரீர் (1)

ஆண்டாளும் முன்னால் அழகிய மாலேயைப்
பூண்டு கொடுக்கப் பெருமையாய்க் கொண்டான் (2)

அவள் மீதிலிருந்த அன்பினைக் காட்ட
அழகிய இடக்கொண்டை முடித்துமே கொண்டான் (3)

அவளைப் பார்த்த பக்தர் இவனைப் பார்க்க வர
அவளோ இவனோ என்று அறியாமல் விழிக்க (4)

ராஜகோபாலனும் ராஜாலங்காரங் கொள்ள
பூஸுரர் அங்கம் பூரித்தும் இருக்க (5)

திருமலே நாயகர் தேடியே பிடிக்க
அருள் சுரந்து அவர்போல் அலங்காரங்கொண்டான் (6)

செந்தாமரைக் கண்ணனை செங்கமலம் ஸேவிக்க
வந்தவர் அனைவரும் வாழிகள் சொல்ல (7)

கீர்த்தனம் 64. ஆளும் பல்லக்கு.
ராகம் : கதன குதூகலம். தாளம் : ஆதி.
மேட்டு : ரகு வம்ச ஸுதா.

ப:-உல்லாஸமாய் வாரார்—பல்லாக்கினிலே
எல்லாரும் ஸேவிக்க— ஏகாந்தமாக (உ)

அ:-மல்லர்களின்—தோளி லேறி
வல்லவர் சூழ—வைகுந்த நாதன்

சி:-மல்லிகை முல்லை யிருவாக்ஷி சம்பக மருக்கொழுந்து
மலர்ந்த வாசனைத் தழையுடன்
நல்ல மணங் கமழும் செந்தாமரை ரோஜா பூத்த
மருதாணி ஜவந்தியின் மாலைகள் தரித்துக்கொண்டு (உ)

ச:-கல்லைப் பெண்ணாக்—கிய பாதத்தை
மெல்லவுந்தான்—மடித்ததன்மேல்
வில்லை வளைத்த—கரத்தை வைத்து
சொல்லறியாத—காந்தியுடன்

சி:-முத்து மாணிக்கம் பவழம் பதித்த மகரகண்டி
முன்னால் அதுமிக ஜொலித்திட
வஜ்ரம் வைடூர்யம் இழைத்த உச்சித மாங்காய்
மாலையும் கச்சித மாகவே யிருகாசுமாலையும் தரித்து (உ)

ச:-அருமையான—ஆளும்பல்லக்கில்
பெருமையுடன்—பெருமானும்
திருமலைநாய—கரைப்போல் சாய்ந்து
கருமணி வண்ணன்—கருணையாய்ப் பார்த்து

சி:-ஜரிகை முண்டாசைத் தலையில் தரித்துமே ஸபையினிலே
கொலு விருந்திடும் கோலம் கொண்டு
திருப்பணி செய்திட்ட திருமலை நாயக்கர்மேல்
திருவுளம் பற்றினதை தெரிவித்து என்றைக்கும் (உ)

ச:-அன்று கானில் கிளிகள்—விண்ட ரோஜாவை
கண்டதன் கனியை—தின்ன எண்ணவே
ஒன்றுங் காணமல்—ஓடிவந்து மொய்க்கச்
சென்றார் அப்பூவிற்குள்—சிறந்த கனி போல

சி:- கனியின் மீதினிலே பச்சைக் கிளிகள் கொத்தக்
கண்டதுவே சக்ரவாஹமும் ஸாரஸமும்
தனியாய்த் தின்ன விடாமல் க்ரவுஞ்சம் பிலவம் புரு
கோகுலம் குயில்கள் கூவ, மயில்கள் மகிழ்ந்து ஆட (உ)

ச:-கனியாகி அதில்—களிப்போ டிருக்க
கிளிகளுங் கண்டு—கூவி மகிழ
தொனி கேட்டவுடன்—தொண்டரும் வரவுன்
தனிமையைக் கண்டு—செங்கமலம் பணிய

சி:-விந்தையாய்க் காலே குந்தித் தண்டில் சாய்ந்து
மந்தஹாசத்துடனே பல்லக்கில் நிறைந்திட
அந்தரங்கமுள்ள பக்தர் வந்து வந்து குவிந்திட
தந்தையும் தாயும் போலவர்கள் பந்தங்களைத் தீர்த்திட (உ)

கீர்த்தனம் 65. உத்ஸவம் 8. சித்ரகூட பர்வதம்.
ராகம் : கௌரி மனோஹரி. தாளம் : ஆதி.
மெட்டு: ப்ரோவஸாமையா.

ப:-இத்திசையினில்—எங்கும் கண்டதில்லை
சித்ரகூடத்தில்—ஸ்ரீ ராமன்வர (இ)

அ:-எத்தனை தூரம்போய்—இருந்து பார்த்தாலும்
கர்த்தனின் ஸேவை—கண்கொள்ள வில்லையே (இ)

ச:-பக்திகொண்ட பரதன்—பார்க்க வந்து நிற்க
பெற்றவர்க் குத்தா—க்ரியைகள் செய்து
உற்ற பாதுகையை—உகந்து கொடுத்து
பத்தினி யுடனே—பஞ்சவடி வர (இ)

துச்சனும் ஸீதையை—தூக்கிக் கொண்டு போக
பஞ்பம் செய்து மானை—பத்தினியைத் தேட
வச்யம் கொண் டனுமான்—வந்தெதிர் தொண்டிட
ருச்யமூகத்தின்மேல்—ரகுநாதன் ஸேவை (இ)

தீனனும் ஸுக்ரீவன்—திருவடி பணிய
ஞானமுத்ரை தரித்த—காத்தினால் அணைத்து
தானவான் லக்ஷ்மணன்—தாழ்வரையில் நிற்க
சேனைக ளுடனே—செல்வத்தை யளிக்க (இ)

ஸுக்ரீவனும் மயங்கி—சோகமுற் றிருக்க
மிக்க கோபத்தோடு—மேகவண்ணன் தஹிக்க
பக்வமாய் ஹநுமான்—பத்தினியைத் தேட
ஸக்யங்கொள் ராமனை—செங்கமலம் பாட (இ)

கீர்த்தனம் 66. உத்ஸவம் 9. ஸிம்ஹ வாஹனம்.

ராகம்: விலக்ஷணதோடி. தாளம்: ஆதி.
மேட்டு: ஓபாகவா நீபிலுசிதே.

ப:-ஓ கோபாலா! ஓடி வருவீர்
சீக்ரமாக—ஸிம்ஹத்தின் மேலே (ஓ)

அ:-பாகவதர்கள்—பந்தலடி சென்று
வேகமாக உம்மை—வேண்டித் துதிக்கின்றார் (ஓ)

ச:-நாகத்தின் மேலே—நன்றாய்த் துயின்று
காகத்திற்கு—கண் கொடுத்து
வாஹனத்தில்—வந்த டைந்தும்
தாஹம் தீராமல்—தவிக்கும் என் நெஞ்சில் (ஓ)

பொன்னைப் பழித்திடும்—பூர்ண சந்த்ர முகமும்
மின்னலைப் பழிக்கும்—மேனி ப்ரகாசமும்
கன்னி செங்கமலத்தின்—காதலரே யும்மை
உன்னிதமாய் அழைத்தேன்-ஒன்பதாம் நாள் அன்று (ஓ)

கீர்த்தனம் 67.

ராகம் : நாட்டைக்குறிஞ்சி. தாளம் : ஆதி.

மெட்டு : எக்காலத்திலும் மறவேன்.

ப:-எப்பொழுதும் நான் மறவேன்—ஏ கோபாலா உன்னை (எ)

அ:-மைப்பொடி வண்ண குரு—
சொற்படியே உன்னைத் தப்பாமலே எண்ண (எ)

ச:-மறத்தைக் கொண்டோரப்—புறத்தினிற் செல்ல
திருத்தவே நீயும்—கருத்தில் எண்ணியே
பெருத்த சிங்கத்தின்—திறத்தை அடக்கி
அறத்தைக்கொள் அஷ்டா—க்ஷரத்தோனே உன்னை (எ)

நடைகொள்ளும் உன்றன்—துடையையும் அதன்
பிடரியின் மீதில்—பட வீற்றிருந்தாய்
படைகளும் பந்தல்—இடையினில் நின்று
அடைக்கலம் புகக்—கடைக்கண் அருள்வாய் (எ)

நலத்தையும் புஜ—பலத்தையும் நல்ல
ஸ்தலத்தையும் புண்ணிய—ஜலத்தையும் கொண்டு
வலத்தினில் செங்க—மலத்தையும் வைத்து
நிலத்தில் பக்தர்க்கு—குலத்தை அளித்தாய் (எ)

கீர்த்தனம் 68. உத்ஸவம் 10. ஸூர்யப்ரபை.
ராகம்: நீலாம்பரி. தாளம்: ஆதி.
மேட்டு: ச்ருங்கார லகரி.

ப:-ஜோதி தெரியுதே—ஸூரிய ப்ரபையினுள்ளே (ஜோ)

அ:-நாதன் கானே வேணு—கானம் செய்வோன்
மாதர்களின் மனம் உருகிட—மந்தஹாஸத்துடனே
மன்னன் மாடுகள் மேய்த்துமே

சி:-ஸா, ரிஸநிப ஸநிபம கமபா, கமப ஸநிப கமபநி, ஸரிஸநி
ஸநிபம, பநிபம, பமகம, ரிகம, ரிகரி, பாமா; காமபநி,
ஸஸநிப, நிநிபம, பபமக, மரிகஸ, மக, பம, நிப, ஸநிபமகம,
பநிதநி, பதப, பமகஸ, பமகஸ நிபமகஸ, ஸநிபமகஸ
என்று குழலூதிவரும் (ஜோ)

ச:-காமபாபம பநீபப மககரி காம பமமா ஸாநிபா பமக மபப
ஸாஸஸஸஸ ஸ நிஸ நிஸரி ஸரிஸநிபப பாதபமக
காமபமமா கமகரி ஸரிகமகரிஸா
ஸாஸஸஸஸ பநிஸாஸ நிரீஸஸ நீஸரீ ஸஸரிஸா நிபகம என்று

சி:-ஊதியே நின்ற கானங்களைக் கேட்டு
உத்தமியான கோபியரும்
சித்தக் கடுமாறி வந்து சேவடி தன்னை யடைந்து
சிந்தை உருகிப்பணிய, கோபாலன் தானும்
விந்தையுடன் கண்டவரை மெல்லிய குரலினாலே
விளையாடவென்று விரும்பி யழைத்துப்பந்து
விளையாடிக்கொண்டு நின்றிட, மான் வந்திட, மயில் ஆடிட,
பிருந்தாவனத்திலே ஒருகாலால் நின்று வரும் (ஜோ)

கீர்த்தனம் 69. உத்ஸவம் 11. சேஷ வாஹனம்.

ராகம் : தோடி. தாளம் : ரூபகம். மெட்டு : தப்பி பிரதிசி.

ப:-ஸிம்மா ஸனமான
சேஷன்மேல் வீற்றிருந்தார் கோபாலன் (ஸி)

அ:-உம்பர் முன் பரம பதத்திலே
உகந்து கொலு இருக்கும்போது
அம்பர வாஸிகளைப் பார்த்து அச்சுதனும் சொல்லுகின்றார்

சி-தேவர்களே! உங்களுடனே நானும்
திகைத்து மிங்கேயே யிருந்து விட்டேன்
பூமியிலே புண்ணிய கோடிகளும் புலம் புகிறார்
அங்கினிலே எந்தனைக் காணுமலே
சிந்தைத் துயரங்களைத் தீர்த்து
ஸேவை அளித்து சீக்கிரமாய் வருவேன் என்று சொல்லி
(ஸி)

ச:-அன்பர்களின் மீதிலே—அருள்கொண்ட ஆதிமூலனும்
இன்பமாய் எதிரினில் வர
துன்பம் தீர்ந்திட பக்தர் வந்தெதிர் கொள்ள

சி:-வந்தவரைக் கண்டுமே
மந்தஹாஸமாக மன்னனும் மனம் பூரித்துமே
ஸந்தோஷமாய் ஸகலரும் காண சரீரத்தி னொளியினால்
சந்திரனைப் பழித்திடுங் காந்தியுடன் செங்கமலங் கண்டு
சேவடி பணிய அருள் சுரந்திடவே ஆநந்தமாய் (ஸி)

கீர்த்தனம் 70. உத்ஸவம் 12. கருடஸேவை.

ராகம் : கல்யாணி. தாளம் : ரூபகம்.

மெட்டு: காந்தி மஹானே.

ப:-வைரமுடி தரித்தே—வைனதேயன் மீதில் வாரார் (வை)

அ:-பையர வணையில் படுத்தோர்—பாற்கடலிலே துயின்றோர்
ஐராவத முடையோன்—அடிபணிந்து பூஜை செய்ய (வை)

ச:-சட்டமாய் ஸ்தம்பத் தடியில்-இரட்டைக் குடைகள் தரிக்க
வட்டமாம் வானத்தி லும்மை—மட்டிலாத் தேவர் துதிக்க

சி:-கட்டுக் கொள்ளா ஜனக் கூட்டங்களும் வர
மட்டு மித மில்லா மாலைகளும் சூட
கொட்டு மேளங்களும் குதூகலித்திட
அட்டஹாஸத்துடன் அனைவரும் வந்து காண (வை)

ச:-ஆனை தன்னைக் காக்க வென்று—அவஸரமாய்ச் சென்றது
போல்
மானிடரும் தவித்துக் கூவ-மன மகிழ்ந்து ஸேவை தந்தாய்

சி:-தானவர்கள் யக்ஷர் கிம்புருஷருடன்
வானத்தினில் நின்ற கந்தருவருடன்
கானத்தில் மிகுந்த நாரதரும் பாட
தீன நாரின்மேல் திருவுளம் பற்றியே (வை)

ச:-திருமுகம் ஸேவித்த பக்தர்—திருவடி ஸேவிக்க நிற்க
பெரிய திருவடி மேலேறி-பிர்ம்மாநந்தமாய் ஸேவை தந்தார்

சி:-கருமணி வண்ணன் உகந்து கருணையுடன்
காதலி செங்கமல மனம் மகிழ்ந்திடப் பாரினிலே நின்ற
பக்தர்களின் மீதில் பரிபூர்ண கடாக்ஷமாய்ப்
பார்த்தே பாலரைக் காத்தே க்ருபையுடன்கோபாலன் (வை)

கீர்த்தனம் 71. உத்ஸவம் 13. காளிங்க நர்த்தனம்.

ராகம் : கானவாரிதி. தாளம் : ஆதி.

மெட்டு : தயஸூஜெஸூடகிதிவே.

ப:-வடிவிற் சிறந்தவனே—வாஸுதேவனே (வடி)

அ:-இடையர்களுடனே
மடுவிலே தவித்த மாடு கன்றுகளை மீட்டுவந்த (வ)

ச:-மிடுக்குடன் காளிங்கன் அதி—விஷத்தினால் எரிக்க
கொடுமையை அடக்கி—படத்தின் மீதிலே பாதத்தை
வைத்துமே ஆடி நின்ற (வ)

கர்வங் கொண்டோரை—கணத்தில் பொடிசெய்வாய்
தர்மங் கொண்டவரை—தாயாம் செங்கமலத்துடன்
வந்துமே தாங்கி நிற்கும் (வ)

கீர்த்தனம் 72. ஹனுமந்த வாஹனம்.

ராகம்: குறிஞ்சி. தாளம் : ஆதி. மெட்டு: சிவதீக்ஷாபருல.

ப:-ஹநுமான் மிதிலே—ஆநந்தமாக
தநுவைக் கரத்தில் தரித்து வருகின்றாரே (ஹ)

அ:-தினந்தினம் ஆராதிக்கும்—தீக்ஷதரும் ஏறி
தீன சரண்யன் களிக்க—சாமரம் வீச (ஹ)

ச:-ஸுக்ரீவனுக்கு மகுடம்— சூட்டி விட்டே
திக்கெல்லாம் சென்று—வானரர் தேடிடவே
தக்கவள் ஆன எந்தன்—தாயுடனே பேசி
சர்க்கரைப் பந்தலிலே—தேன்மாரி பொழிந்த (ஹ)

திருவடிமலர் தன்னிலே—ஸேவித்துமே
சரணுகதியைச் செய்த—விபீஷண னுடனே
பரிவாரத் துடன் சென்று—ராவணனைக் கொன்று
திருவயோத்திக்குச் சென்றுமே—திருமுடி சூட (ஹ)

கீர்த்தனம் 73. உத்ஸவம் 14. யானை வாஹனம்

ராகம்: கானடா. தாளம்: ரூபகம். மெட்டு: ஸ்ரீ நாரத.

ப:-தினையான நானும்—தேடித் திரிந்து வந்தேன் (தீ)

அ:-ஆனை மீதி லேறி வரும்—ஆதி மூலனே உன்னை (தீ)

ச:-வானவர் வந்து காத்திருக்க
கானம் செய்து களித்திருக்க
தேனைக் கொண்ட பூமாலை சூடி
திருக்கல்யாணக் கோலாஹலத்தை (தீ)

பதினாறு வயது கொண்ட
பாலனைப் போல் கோலங் கொண்டாய்
மதியைப் பழிக்கும் முகத்துடனே
மங்கள வாத்தியங் கேட்டோனே (தீ)

ஜரிகையினால் சட்டைகளும்
இறுக்கக் கட்டும் கச்சைகளும்
தரித்த ராஜகோபாலா எந்தன்
தாயாம் செங்கமலத்தோ டுன்னை (தீ)

கீர்த்தனம் 74. உத்ஸவம் 15. கோ ரதம்.
ராகம்: ரவிசந்த்ரிகா. தாளம்: ஆதி.
மெட்டு: நிரவதிஸுகதா

ப:-கோரதத்தின் மேலே—கோபாலன் வாரார்—
குதூகலத் துடனுகவே (கோ)

அ:-பாரியர்க ளுடனே—பரம ஸந்தோஷமாய்
சூர்ண உத்ஸவத் தன்று—ஜோதியாய் விளங்கிடும் (கோ)

ச:-கார் மேனி வண்ணன்—கண்ணாடி அறையில்
களிப்புடன் வீற்றிருந்து—சிறப்பாய்
பாரினில் நின்ற—பக்தர் பரிமள
மாரிகள் சொரிந்திட—மஞ்சள் நீர் விளையாடி (கோ)

செங்கமலத்தோடு—சிரித்து மகிழ்ந்து
சிறக்கக் கல்யாணஞ் செய்து—கொண்டு
பொங்கிடும் சுத்தரும்—எங்கிலும் நிறைந்து
அங்க முருகியே திரு—அடிமலர் ஸேவிக்க (கோ)

கீர்த்தனம் 75. பல்லக்கு ஸேவை.
ராகம்: பியாக். தாளம்: ஆதி.
மெட்டு: ஜேயஜேய பாரத தேவி.

ப:-கொஞ்சி வரும் இந்த—கோபாலன் தன்னை
கோதையரே நாம்—ஸேவிப்போம் வாரீர் (கொ)

ச:-வஞ்சிக் கொடியர்கள்—வந்தெதிர் நிற்க
பஞ்சணை போலொத்த—பல்லாக்கின் மீதில்
மஞ்சள்நீர் விளையாடி மாப்பிள்ளை கோலத்துடன் (கொ)

அஞ்சன வண்ணன்—அழகினைக் கண்டோர்
பஞ்சமா பாதகம்—பறந்தோடும் அம்மா
தஞ்சம் என்றோரை—தயவுடன் காக்க (கொ)

பக்தியுடன் நாமும்—பாதத்தைக் கண்டால்
மெத்தப் பெரும் புகழும்—மேன்மையும் அளிப்பன்
பத்தரை மாற்றுப் பவுன் நிறம் போன்றே (கொ)

கீர்த்தனம். 76 உத்ஸவம் 16 நவநீதஸேவை.
ராகம் : சாயாதரங்கிணி. தாளம் : ரூபகம்.
மெட்டு : இதர தெய்வ.

ப: வெண்ணெய்த் தாழியைக் கையில் அணைந்து
விதியில் வாரார் கண்ணன் (வெ)

அ:-மண்ணை உண்ட மாயவனும்
எண்ணெய்க்குடத்தை உருட்டி விட்டே (வெ)

ச:-பெண்களின் நடுவில் நின்று
கண்களை யுருட்டி விழித்துக் கொண்டு
வண்ணமாக வார்த்தை சொல்லி
திண்ணமாகத் திருடி வந்த (வெ)

பவழநிறம் போன்ற வாயில்
பால் தயிரைப் பூசிக்கொண்டு
தவழ்ந்து வந்து தயங்கி நிற்க
தாய் யசோதை கண்டு களிக்க (வெ)

அண்டம் அளந்த பாதத்தில்
தண்டை சிலம்பு சப்தமிட
மண்டி போட்டு மாதர் வீட்டில்
சண்டை யிட்டுப் பண்டங் கொண்ட (வெ)

பரந்தாமன் பல்லாக்கிற் செல்ல
பஜனை கோஷ்டி பின் தொடர
தரமில்லா மஹிமை கொண்ட
தாயாம் செங்கமலம் மகிழ (வெ)

கீர்த்தனம் 77. குதிரை வாஹனம்.
ராகம் : ஹிந்துஸ்தான். தாளம் : ஆதி.
மெட்டு : ஸரோஜ ஜாகே தர்பர்.

ப: பாய்ந்து ஏறிக் கொண்டாரே—பரியின்மேல்
பாரிவேட்டை யாடவே—பாங்குடனே (பா)

அ:-சாய்ந்துகொண்டு லகானை—சரியாய் இழுக்கவே
ஓய்ந்துவிடாமல் அது—உதறிக் கொண்டோடவே (பா)

ச:-கையைத்தட்டி அதை—கனைத்து மிரட்டியே
வையாளி விட்டுவரும்—வாரிஜாக்ஷன் அவனும்
கொட்டமிடும் கஜமுடன்—அட்டமிடும் த்வஜமுடன்
எட்டியே குதிரையை—சட்டமாகவே பிடித்து (பா)
செட்டித் தெருவதனை—சிங்காரிக்க
சிறப்பதனைக் கண்டோர்—ஸேவித்திட
எட்டுத் திசையில் உள்ளோர்—மட்டில்லாமலே வர
கட்டியங்கள் போட—வட்ட வெண்குடையின் கீழ் (பா)
பட்ட வர்த்தனர் வந்து பார்த்திருக்க
தட்டி விட்ட குதிரை வேகமாக
தடதட தடதட படபட படபட
குடுகுடு குடுவெனக் குதிரையும் வரவே
திடுதிடு திடுவெனத் தேரினி லேறச்
சடுதியிலே செங்கமலம் வந்துகாண (பா)

கீர்த்தனம்: 78 உத்ஸவம், 17. திருத்தேர்.

ராகம்: பைரவி. தாளம்: ஆதி. மெட்டு: பால கோபால.

ப:-ஜோதி பெருகிடும் தேரினிலே வரும்
ஸ்வாமி தன்னைக் காண வாரீர்—மங்கைமீர் (ஜோ)

அ:-பூதலத்திலே யிந்த ஊரும்—புண்யம் செய்ததனால்
மாதவனும் வந்து—மகிழ்ந்து உத்ஸவம் கொள்ள
நீதியாய் வேத கோஷம் முழங்கிட—வீதியில் மாதர்
கோலம் எழுதிட (ஜோ)

ச:-ஆடக லோகத்தினிலே அமுதத்தை
ஈக்கள் வந்து மொய்ப்பதுபோல்
அப்பனை மொய்த்துக் கொண்டார் ஆசையினால்
கோடை காலத்திலே மான்கள் எல்லாம்
ஓடையைக் கண்டாற் போல்
மூடரும் நல்ல மானிடரும் கூடியே வர
பாடியே பரமானந்தமாய் வர
தேவி செங்கமலமும் திருவடியில் பணிய (ஜோ)

கீர்த்தனம் 79.

ராகம்: அடாணா. தாளம்: ஆதி. மெட்டு : ஏல நீதயராது.

ப:-ஏனோ பராமுகம் இந்த ஸமயத்தில்
தீனனைக் கைவிட வேண்டாம் (ஏ)

அ:-காணும்லே முன்னால்—போன வேதங்களை
மீனமாயெடுத்து—வேணவர்க் கீந்தாயே
கானஞ் செய்ய வென்றும்—பானஞ்செய்ய வென்றும்
தானஞ் செய்யச் சொன்ன—தீன சரண்யனே (ஏ)

ச:-வாடா ராஜ கோபாலா—வாடா நந்தகுமாரா
வாடா செங்கமலத்தோடு—வஸந்த உத்ஸவம் கொள்ள
வாராய் எந்தன் முகத்தை—பாராய் மனக்கவலை
தீராய் உந்தன் பாதத்தில்—சேராய் சேராய் என் நெஞ்சை
கோரமான ஸம்ஸாரம்—பாரமாக அமுக்கித்
தூரக்கொண்டு போகுதே—தேரில் இருக்கும் கண்ணு (ஏ)

கீர்த்தனம் 80

ராகம் : கரஹரப்பிரியா. தாளம் : சாபு.

ப:-ஆடி அசைந்துவரும்—வேடிக்கை பார்த்தடியேன்
கூடிக்குதித்து மகிழ்ந்தேன்—கோபால க்ருஷ்ணு (ஆ)

அ:-(நீ) ஓடிவாராதுகண்டு—உள்ளம் மிகத்தவிக்க
வாடி யெதிர்யான் கூவக்—கோடி பக்தர் நடுவில் (ஆ)

ச:-கண்ணுக்கோர்உருவாய்ப் பார்ப்போர்கண்ணில்தோற்றும்
கண்ணனே உனக்கிதோர் ஆயாஸமோ
பண்ணினேன தியானம் என்—பழவினை தீர்ந்திட
எண்ணினேன் உன்னிடம்—இன்பம் அடைந்திட
திண்ணமாய் உரைப்பன்கேள்—தினமுன் செங்கமலத்தை
உண்ணச் செய்தருள்வாய்—உகந்து தேரினில் ஏறி (ஆ)

கீர்த்தனம் 81. தாயார் விஷயம்.

ராகம்: முகாரி. தாளம்: ஆதி.

ப:-தாயே நீ இங்கு வரு—வாயே என் தாயே என்
தாயே என் தாயே உன்—சேயைக் காக்க (தா)

அ:-வாயைத் திறந்து உன்னை—வாவென் றழைக்கறியேன்
மாய ஸம்ஸாரமதில்—மன்றுடுவேனைக் காக்க (தா)

ச:-சேயைத் தவிக்க விடல்—சிறந்த அன்னைக் கழகோ
ஓயாது கத்திவிடில்—உடன் அணைப்பாய் அதுபோல்
நாயினும் கடையேன்—நாடித் துதிக்க லானேன்
ஆயாஸம் தீர்த்திப்போ—தருள்வதுன் பாரமம்மா (தா)

பொய்யும் புரட்டும் பல—பேசிப் பேசிப் பாவத்தை
செய்வேனே யல்லா துன்னை—சிந்தனை செய்கில்லேன்
ஐயனோ டென் நெஞ்சில்—அமர்ந்த செங்கமலமே
உய்யச்செய்து நீ வைப்பாய்—உடனே வந்து (தா)

கீர்த்தனம் 82.

ராகம்: கல்யாணி. தாளம்: ரூபகம்.

ப:-செங்கமல வல்லியின் சீர்ப்
பாதம் போற்றுவோம்—ஏ ஸகிகாள் (செ)

அ:-பொங்கும் அவள் பங்கயமே- தங்கும் என தங்கத்துளே
நீ வாராயோ—பா கேளாயோ (செ)

ச:-சங்கு சக்ரம் கதை யணிந்தோன்-அங்க மருவும் ஆநந்தியே
பங்கமின்றிப் பாதுகாக்கும்-தங்கம்போன்ற எங்கள் அன்னை
பக்தரை ஸித்திக்க—மெத்தவும பற்றிடும்
சுத்த ஸத்வத்தினல்—லுத்தமி பெற்றவள்
மெத்தப்புகழோடென்—சித்தத்துதித்தவள்
கர்த்தனைப் பற்றிடச்—சக்தி அளித்தவள்
பாலகி வாவெனப்—பரிந்தழைப்பவள்
சீலமேலோ அங்கு—சீக்கிரம் என்பவள்
ஓலமிட்டுக்கூவ—ஓடியே வந்தெதிர்
ஜோலியை நீக்கித் தன்—ஜோதி யளிப்பவள் (செ)

கீர்த்தனம் 83.

ராகம்: உமாபரணம். தாளம்: ஆதி.

மெட்டு: நிஜமர்ம முலனு.

ப:-விஜய லக்ஷிமியே—வேதன் மாதாவே
வேண்டித் துதிக் கின்றேன்—விடை யளிப்பாயே (வி)

அ:-அஜ—கஜாந்தமாய்—அண்டங்களை ரக்ஷித்தாய்
பூஜை புரிந்தோருக்காய்—பூமியில் உதித்தாய் (வி)

ச:-தசமுகனைக் கொன்று—திவ்ய புஷ்பகம் ஏறி
விசனங் கொள் பரதன்—வேதனை தீர்க்க
வசமுள்ள வானரர்—வழிவிட வந்து
கோசலை குமாரன் மார்பில்—குதூகலமாய் நின்ற (வி)

சிங்கப் பதுமை வைத்த—ஸிம்மாஸனத்தி லேறி
எங்கும் உள்ளோர் நாடிட—இன்பமுடி சூடிட
செங்கமலத் துதித்த—ஸீதையே நீ கூடிட
செங்கரங் குவித்தடியார்—ஸேவித்து மகிழ்ந்திட (வி)

கீர்த்தனம் 84.

ராகம்: கமாஸ். தாளம் : ரூபகம். மெட்டு: ஸுஜன ஜீவனு.

ப:-பாற்கடல் நின்று—பாரில் வந்துதித்த தாயே (பாற்)

அ:-மார்க்கம் அறியாத—மைந்தர்களைக்காண
ஏற்கும் மிதிலையில் ஏர் உழுதிட—இன்பமாய் உதித்தாயே

ச:-சீர்பெற்ற ஜனகன் மனையில்—செல்வமாய் வளர்ந்தாய்
பேர்பெற்ற ரகுநாதன் மார்பில்—பிரியாமலே நின்றாய்
சேர்வோமோ நாங்கள் உன்—செங்கமல பாதத்தில்
யார்போற்றினும் அருள் சுரந்து—அரவணைக்கும் தாயே (பா)

கீர்த்தனம் 85. மங்களம்

ராகம்: மத்யமாவதி—தாளம்: ரூபகம்
மெட்டு: ஏமாம்ச வல்லிக்கு.

ப:-ஸ்ரீ ராஜகோபாலனுக்கு—ஜெயமங்களம்
செம்பகாரண்ய வாஸனுக்கு—சுப மங்களம் (ஸ்ரீ)

ச:-இந்த்ராதி தேவர்கள் வந்து
எப்பொழுதும் துதித்து நிற்க
சந்த்ராதி மூவர்கள் வந்து
ஸாஷ்டாங்க மாய் ஸேவித்திருக்கும் (ஸ்ரீ)

ஹரித்ரா நதியில் இறங்கி
ஆனி தன்னில் க்ரீடை செய்து
பரிவாரத்துடன் எந்நாளும்
பாங்காகவே வாழ்ந்திருக்கும் (ஸ்ரீ)

ருக்மணி ஸத்ய பாமையும்
பக்கத்தில் எப்பொழுதும் நிற்க
தக்கவள் ஆன செங்கமலமும்
தகுதியுடனே அகலா திருக்கும் (ஸ்ரீ)

சுபமஸ்து.

PRINTED AT
THE GANAPATI PRESS
FINDLAY COLLEGE BUILDINGS
MANNARGUDI.